அறைவு 02 இயம் 15 November 16 - 22, 2013

# மலைமுரசு

MALAIMURASU

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

வார இதழ்

விலை : 25.00 பக்கங்கள் : 16 Registered as a newspaper in Sri Lanka பிரதி சனிதோறும் வெளியாகும் வார இதழ்



"யுத்தக் குற்றவாளி களுக்குப் பாரபட்ச மின்றித் தண்டனை"

பண்டாரநாயக்கா மண்டபத்தில் உலக ஊடகவியலாளர்களிடம் சனாதிபதி உறுதி



## பொதுநலவாய மாநாடு - நாட்டுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி

### கிழக்கின் முதல்வர்

இலங்கைக்கு எதிராக ஏகாதிபத்திய சக்திகளின் போலியான பிரசாரங்கள் மற்றும் சவால்களுக்கும் மத்தியில் ஜனாதிபதி மஹிந்த ராசபக்சவின் ஆளுமை மிக்க தலைமைத்துவ கட்டமைப்பினாலும் தான் 23 வது பொதுநலவாய நாடுகளின் தலைவர்களது உச்சி மாநாட்டை நமது நாட்டில் நடத்துவதற்கு 03

## திருமலைப் பட்டதாரிகளுக்கும் நிரந்தர நியமனம் விரைவில்....?




நிரந்தர நியமனத்திற்காக் காத்துக் கிடக்கும் திருகோணமலை மாவட்டப் பட்டதாரிகளுக்கும் விரைவில் நிரந்தர நியமனக் கடிதங்களை வழங்கும் நடவடிக்கைகளை பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு முன்னெடுத்துள்ளது.

அமைச்சின் கட்டளைக்கு இணங்க திருகோணமலை மாவட்டச் செயலகமும், உரிய பிரதேசச் செயலகங்களும் நியமனம் வழங்குவதற்கான விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதாக அறியக் கிடைக்கின்றது.

வழங்கப்பட்ட உறுதி மொழிகளுக்கு அப்பால் பல காலமாக பட்டதாரிப் பயிலுனர்கள் தமது நிரந்தர நியமனத்திற்காகக் காத்துக் கிடக்கின்றனர். இம்மாத இறுதிக்குள் இந் நியமனம் வழங்கப்படலாம் எனும் எதிர்வு கூறலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குச்சவெளி மக்களிற்குக் காணிப் பத்திரங்கள்



குச்சவெளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளை உள்ளடக்கியதாக 2008/4 சுற்று நிருபத்தின் கீழ் பயனாளிகளுக்கு அனுமதி பத்திரம் வழங்கும் நிகழ்வு கடந்த 9ம் திகதி காலை 10.30 மணிக்கு குச்சவெளி விவேகானந்தா மகா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண கல்வி கலாச்சார விவகார மற்றும் காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் விமல வீர திஸானாயக்க அவர்களின் அழைப்பின் பேரில் காணி மற்றும் காணி பிரதி அமைச்சர் ஸ்ரீபால கம்லத் அவர்கள் 03

## கிழக்குக் கரையில் கடல் சீறும்



கிழக்கின் கடற்பரப்பு தற்போதுள்ள காலநிலை மாற்றத்திற்கு ஏற்பக் கடும் சீற்றத்துடன் காணப்படும் என இலங்கையின் வானிலை அவதானிப்புக்கள் தெரிவித்துள்ளன.

காற்றின் வேகம் தளம்பிக் கொண்டிருப்பதுடன் இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் வேகம் மணிக்கு 03

## மரணமானவரின் சடலங்கள் மட்டக்களப்பிற்கு....

சவூதி அரேபியாவில் தொழில் வாய்ப்புக்காக சென்று அங்கு மரணமடைந்த மட்டக்களப்பை சேர்ந்த தமிழர்கள் மூவரின் சடலங்களை இலங்கைக்கு கொண்டு வர அம் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

இவர்கள் மூவரும் சவூதிக்கு தொழில் வாய்ப்பு பெற்றுச் சென்றிருந்த போது இயற்கை மரணமடைந்ததாக அந்நாட்டு அதிகாரிகள் அறிவித்ததை அடுத்து அவர்களின் சடலங்கள் அங்குள்ள வைத்திய சாலையில் மாதக்கணக்கில் வைக்கப்பட்டுள்ளன. 03

## கல்விக்கான நிதி ஒதுக்கீடு குறைப்பு





கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இந்த வருடத்தில் கல்விக்கென ஒதுக்கப்பட்ட அரசின் நிதியானது 0.31 % குறைவடைந்துள்ளது.
கடந்த வருடத்தின் மொத்தப் பாதீட்டின் 1.86% கல்விக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் இவ்வருடப்பாதீட்டின் மொத்தச் செலவீனத்தில் 1.49% ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த வருடத்தை விட 920 மில்லியன் ரூபாய்களை இலங்கை அரசு கல்விச் செலவுகளுக்காக அதிகமாக ஒதுக்கியிருப்பதாக அறிவித்துள்ள போதும் மொத்தச் செலவினத்தின் விகிதமாக கல்விச் செலவுகளுக்கான நிதி குறைந்திருப்பது தெரியவந்துள்ளது. யுனெஸ்கோ அமைப்பின் சாசனத்தின் படி எந்தவொரு அரசும் தனது மொத்தச் செலவின் 6% த்தையாவது கல்விக்கென ஒதுக்க வேண்டும் எனக் கேட்டுள்ளமைகுறிப்பிடத் தக்கது.



## ஆரையம்பதி அத்துமீறல்கள் தொடர்பாக த.தே.கூ ஆராய்வு

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப்பற்று (ஆரையம்பதி) பிரதேச சபை எல்லைக்குள் காத்தான்குடி நகர சபையின் செயற்பாடுகள் குறித்து ஆரையம்பதி பிரதேச சபைச் செயலாளர் திருமதி அருள் பிரகாசத்துடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கலந்துரையாடியுள்ளது. 03

## பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திப்பாதையைத் தடுக்க வேண்டாம்




(நிரேஸ்)

கடந்த காலங்களில் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் அபிவிருத்திக்குப் பொருத்தமான சூழல் காணப்படவில்லை. ஆனால் தற்போது கிழக்குப் பல்கலைக்கழகம் அபிவிருத்திப் பாதையில் மிக வேகமாக முன்னேறி வருகின்றது.

அவ்வாறு மிக வேகமாக முன்னேறி வரும் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திச்

### கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம்

சூழலைக் குழப்ப வேண்டாம் என கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் வேண்டுகோள் ஒன்றைப் பகிரங்கமாக விடுத்துள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் மொட்டைக் கடிதங்கள் என்ற தலைப்பில் கடந்த 12ம் திகதி இவ்வூழியர் சங்கத்தினால் 03

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042 fax: 026 2223071

## வணக்கம்

### கேள்விக் குறியாகும் பொதுக்கல்வி

இலங்கையின் 2014ம் ஆண்டுக்கான பாதீட்டில் கல்விக்கான நிதியினை ஒப்பீட்டளவில் குறைத்துள்ளது அரசு.

உலக யுனெஸ்கோ நிறுவனம் அரசாங்கங்கள் தமது மொத்த வருடாந்தச் செலவில் ஆகக்குறைந்தது ஆறு வீதத்தையாவது கல்விச் செலவிற்காக ஒதுக்க வேண்டும் எனக் கோரிக்கைவிடுத்துள்ள நிலையில் இலங்கை தனது மொத்தச் செலவில் ஒன்றரை வீதத்தைக் கூட 2014ம் ஆண்டின் கல்விச் செலவுகளிற்காக ஒதுக்கவில்லை.

இலங்கையின் அயல் நாடுகள் தமது மொத்தத் தேசிய உற்பத்தியில் சாராசரியாக ஆறு வீதத்திற்கு மேற்பட்ட தொகையினை கல்விச் செலவுகளுக்காக ஒதுக்குவது புள்ளி விபரங்கள் ஊடாகத் தெரிகின்றது.

கல்விச் செலவுகளின் குறைப்பு நேரடியாகவே நிறையத் தாக்கங்களை ஏற்படுத்தும். அத்துடன் அரசின் இலக்கு எதுஎன்பதையும் இந்நிதி ஒதுக்கீட்டுக் குறைப்பு விளக்கி நிற்கின்றது.

கல்வி நிதி ஒதுக்கீடு மொத்தச் செலவின் விகிதமாகக் குறையும் போது பாடசாலைச் சேவைகள் மற்றும் உயர் கல்விச் சேவைகளில் அபிவிருத்தி குறையும் என்பதை புரிந்து கொள்ள முடியும். அத்துடன் அடுத்த வருடத்தில் கல்தாரிப் பயிலுனருக்கு வழங்கப்படும் ஆசிரிய நியமனங்களின் அளவும் குறைக்கப்படும்.

புதிய கல்வித் திட்டத்திற்கு அமைய இவ்வருடம் உருவாக்கப்பட்ட உயர்தரப் பாடப் பிரிவான தொழில்நுட்பப் பாடப் பிரிவு, தேர்வு செய்யப்பட்ட சில மாவட்டங்களில் சில பாடசாலைகளில் மட்டுமே இவ்வருடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அப்பாட விதானத்தின் அபிவிருத்தியும், இன்னும் பல பாடசாலைகளில் அதனை ஆரம்பிப்பதும், அப்பாட விதானத்திற்கான வளங்களைச் சேர்ப்பதும் 2014ல் ஸ்தம்பித நிலையை அடையும்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக கல்விக்கான பொதுச் செலவைக் குறைக்கும் அரசின் முயற்சியின் பின்புலத்தில் தனியார் துறை கல்வித் துறைக்குள் குதிக்கும் முயற்சியின் அருவருக்கத்தக்க கரம் ஒன்று மறைந்து கிடக்கின்றது.

அக் கரத்தை அறுத்தெடுத்தல் இனிச் சாத்தியப் படப் போவதில்லை. ஏனெனில் அக்கரம் அரசை இயக்கும் கரங்களுள் முக்கியமானதாக உள்ளது.

அம் மறைகரத்தின் அழுங்குப் பிடிக்குள் அகப்படாமல் எமது இனத்தின் கல்வி நிலையை எவ்வாறு முன்னெடுக்கப் போகின்றோம் என்பதே எம் முன் நிற்கின்ற கேள்வி!

இன்னும் ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் மாயைக்குள் சிக்கிக் கிடக்கும் நாம் எதிர்கொள்ளப் போகும் பெரும். நெருக்கடியொன்று முன்நிற்கின்றது என்பதைப் பற்றிச் சிந்திப்போமா?

## மாவிலாறில் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன



மாவிலாறு காட்டுக்குள்ளிருந்து ஒரு தொகுதி ஆயுதங்களை வாகரைக் காவல்துறையினர் மீட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை 09.11.2013ல் வாகரையின் 233ம் இராணுவப் படையணிக்குக் கிடைத்த துப்பொன்றை அடுத்து காவல்துறையுடன் இணைந்த இராணுவத்தினர் இவ்வாயு தங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

இவ் வாயுதத் தொகுதியினுள் ரி.56 துப்பாக்கியொன்று அதற்கான ரவைகள் 2000 மற்றும் எம்.ரி.எம். ஜி இலகு எந்திரத் துப்பாக்கி ஒன்று அதற்கான ரவைகள் 400, சி4 வெடிமருந்து 15 கிலோ, ரி.என்.ரி. வெடிமருந்து 20 கிலோ உட்பட வெடி வைக்கும் வடங்களையும் காவல்துறை கைப்பற்றியுள்ளது.

## ஆவணங்கள் இன்மையால் காவல் நீடிப்பு

(கீத்)

கடந்த மாதம் 17ம் திகதி புல்மோட்டைக் கடற் பரப்பில் கைதான இந்திய மீனவர்களுக்கு காவல் நீடிக்கப் பட்டுள்ளது.

நான்கு ட்றோலர் படகுகளில் புல்மோட்டைக் கடற்பரப்பில் அத்துமீறிய 32 இந்திய மீனவர்களின் தடை உத்தரவை 14ம் திகதியிலிருந்து மேலும் 7 நாட்களுக்கு திருமலை மாவட்ட நீதிபதி நீடிப்புச் செய்துள்ளார்.

இவர்களுக்கான ஆவணங்கள் கிடைக்கப் பெறுவது தாமதமாகு வதாலேயே இந் நிலை ஏற்பட்டுள்ளது.



## வீட்டுக்காவலிடப்பட்ட தமிழர்கள் விடுதலை

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகோத்தாவில் நடைபற்ற மனித உரிமைச் செயற்பாடுகளில் கலந்து கொண்ட தமிழர்கள் காவல்துறையாக் அக்கட்டடத்தினுள் வீட்டுக் காவலிடப்பட்டனர்.

வடக்கிலிருந்து வந்திருந்த தமிழர்களுக்கே இந் நிலை ஏற்பட்டிருந்தது. எனினும் பொதுநலவாயக் கூட்டத் தொடர் அரும்பமான 15ம் திகதி இவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.




24வது கார்த்திகை வீரர்கள் நினைவு தினத்தை முன்னிட்டு முன்னிலை சோசலிசக் கட்சி 13ம் திகதி நாடு முழுவதும் நினைவு கூர்ந்துள்ளது செய்துள்ளது.

சகல மாவட்டங்களிலும் கார்த்திகை வீரர்கள் தினம் அனுஸ்டிக்கப்படவிருப்பதுடன் காலி கேகாலை போன்ற இடங்களில் விசேட கருத்துரைகளும் நடைபெறவுள்ளது.

திருகோணமலையில் கந்தளாயில் காலை 10மணிக்கு இந்நிகழ்வுகள் நடந்தேறியுள்ளன.

## உளவளத்துணைப் பயிற்சி

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசாங்கத்தினால் பல வகையான அபிவிருத்தித் திட்டங்கள் பலகோடி ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் குறிப்பாக மது பாவனையினால் வீட்டு வன்முறை மற்றும் சிறுவர் துஸ்பிரயோகம் என்பன அதிகரித்தே காணப்படுகின்றது. இவ்வாறு 06,07,08 திகதிகளில் திருவாளர். மெக்ஸ்வெல் ஒக்கஸ் அவர்களால் நடாத்தப்பட்டது.

குறிப்பாக இளைஞர் அபிவிருத்தி ''அகம்'' மற்றும் திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பு ஆகிய அமைப்புக்களின் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் உள்ள திட்டச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக புதிதாக இணைக்கப்பட்டு பணியாற்றி வரும் உத்தியோகத்தர்கள் மற்றும் இலகு படுத்துனர்கள் 22 பேருக்கே இவ் ஆரம்ப உளவளத் துணைப் பயிற்சி இடம் பெற்றது.

(கலாஹரன்)





இளைஞர் அபிவிருத்தி அகம், பெண்கள் வலையமைப்பு மற்றும் உளவளத் துணை நிலையத்தினால் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட உளவளத் துணை ஆரம்பப் பயிற்சியினை நிறைவு செய்த பயிலுனர்களுக்கான சான்றிதழ்களை வழங்கி கௌரவித்த மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் (கச்சேரி) திட்டமிடல் பணிப்பாளர் திரு. திரு.எஸ்.நெடுஞ்செழியன் அவர்கள் தெரிவித்தார்.

இப் பயிற்சியானது மட்டக்களப்பு மாவட்ட உளவளத் துணை நிலையத்தின் மைலாம்பாவெளி பயிற்சி நிலையத்தில் உதவி இயக்குனர்

## புலம்பெயர் மக்கள் இந்து இளைஞர் பேரவை ஊடாக உதவி.

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையினரால் போரினால் காயப்பட்டவர்களுக்கும், விதவைகளுக்கும், வறியவர்களுக்குமான கனடா, அமெரிக்காவிலுள்ள அமைப்பின் உதவி மூலம் சித்தாண்டி பெருமாவெளி சிறி வாணி வித்தியாலயத்திலுள்ள வறிய மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் இன்று புதன்கிழமை வழங்கப்பட்டது.

இங்கு கல்வி கற்கும் வறிய மாணவர்கள் ஒருவருக்கு தலா ஆயிரம் ரூபாய் வீதம் 37 மாணவர்களுக்கு பாடசாலைப் பாதணிகள் மற்றும் கல்வி உபகரணங்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டது.

இவைகள் அனைத்தும் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை தலைவரும், தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினருமான சீனித்தம்பி யோகேஸ்வரன் தலைமையில் வழங்கப்பட்டது.

(நரேஸ்)

## சம்மாந்துறை மாணவருக்கு அனுமதி அட்டைகள்

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சை 2013ற்கு தோற்ற இருக்கும் சம்மாந்துறை தேசிய பாடசாலை மாணவர்க்கான பரீட்சை அனுமதி அட்டை வழங்கும் நிகழ்வு இன்று (2013.11.14) பாடசாலை ஆராதனை மண்டபத்தில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மாணவர்களுக்கு அனுமதிப் பத்திரங்களை பாடசாலை அதிபர் எச்.எம். பாறூக் வழங்கி வைப்பதை படங்களில் காணலாம்.

(பர்ஹான்)











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுநலவாய மாநாடு...

கிடைத்த மாபெரும் வெற்றியாகும் என கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திர ஆசிரியர் சங்கத் தலைவர் அதிபர், ஏ.ஜே.எம்.றூமி தலைமையிலான அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் சந்திப்பின் போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் நாட்டின் அரசியல் ஸ்திரதன்மையும் மூன்று தசாப்தங்களுக்கும் மேற்பட்ட காலம் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட நாட்டை மீண்டெடுத்த பின்னர் இலங்கையின் வட - கிழக்கு மாகாணங்களில் ஜனநாயக ரீதியான மாகாணசபை தேர்தலை நடாத்தி அங்குள்ள மக்கள் தற்போது சுதந்திரமான காற்றை சுவாசித்துக் கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள அபிவிருத்தி களையும் முன்னேற்றங்களையும் வெளிநாட்டுத் தலைவர்களுக்கு நேரடியாகக் கண்டு கொள்ளக் கூடிய வாய்ப்பை இம் மாநாடு பெற்றுக்கொடுத்துள்ளது.

மேலும் இம் மாநாட்டை யொட்டி இலங்கைக்கு வரும் வெளிநாட்டு முதலீட்டர்கள் இங்கு ஏற்பட்டுள்ள சாதகமான சூழ்நிலையை நேரில் அவதானித்து வடக்கு கிழக்கு உட்பட நாடு முழுவதும் கூடுதலான முதலீடுகளைச் செய்ய வாய்ப்பு ஏற்பட்டுள்ளதோடு பொது நலவாய நாடுகளின் உச்சி மாநாடு இலங்கையின் கீர்த்தியை உலக நாடுகளுக்கு வெளிப்படுத்தும் என்பது யாவரும் அறிந்த உண்மை எனவும் கூறினர்.

அழகும் பசுமைமிக்க இந் நாட்டில் பௌத்தர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் அனைவரும் சகோதரத்துடனும், ஒற்றுமையுடனும் வாழ்ந்து வருவதையும் இம் மாநாட்டுக்கு வரும் அனைவரும் கண்டு கொள்ளக்கூடிய நிலைமை யுள்ளதாகவும் முதலமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## குச்சவெளி..

தலைமையில் மற்றும் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத் மற்றும் பொருளாதார பிரதி அமைச்சர் சுசந்த புஞ்சி நிலம, திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம.எஸ்.தௌபீக், கிழக்கு மாகாண சபை தவிசாளர் ஆரியவதி கலப்பதி, கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்.எம்.அன்வர் குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் பிரதி தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் குச்சவெளி பிரதேச செயலாளர் காணி அமைச்சினுடைய காணி ஆணையாளர் நாயகம் கிழக்கு மாகாண காணி ஆணையாளர் மற்றும் அதன் உயராதிகள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது.

இதன்போது 302 காணி பத்திரங்கள் மகிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் கீழ் உரியவர்களுக்கு கையளிக்கப்பட்டது அதற்காண விண்ணப்பங்கள் 2008ம் ஆண்டு விண்ணப்பிக்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது

அண்மைக்காலமாக குச்சவெளி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதியில் காணி பிரச்சினைகள் அதிகமாக ஏற்பட்டமை குறித்து மாகாண சபைக்கு மா.சபை.உறுப்பினர் அன்வரால் பல முறை பிரேரணை கொண்டு செல்லப்பட்டது மாத்திரமன்றி காணிப் பத்திரங்களை வழங்குவதற்காக கி.மா.காணி அமைச்சரின் தலைமையில் விசேட கூட்டங்கள் நடத்தப்பட்டு கிழக்கு மாகாண காணி ஆணையாளரூடாக குறித்த பிரதேச செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டு முதன் கட்டமாக இவ் வைபவம் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

(அன்வர்)

## கிழக்குக் கரையில்...

80 கிலோமீற்றர் வரை உயரும் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. இதே வேளை 15ம் திகதி சூறாவளி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக வதந்தியொன்று திருமலைக் கடற்கரைப் பகுதியில் பரவியதைத் தொடர்ந்து மலைமுரசிற்குப் பல அழைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

உடனடியாக வளி மண்டல வியல் திணைக்களத்துடன் மேற் கொள்ளப்பட்ட தொடர்புகளின் போதுஅத்தகவல் வதந்தி எனத் தெரிந்தது.

## பல்கலைக்கழகத்தின்..

வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

மேலும் இவ் அறிக்கையில் பல்கலைக்கழகமானது நாடளாவிய, உலகளாவிய ரீதியில் பேசப்பட வேண்டுமானால் அது பல வகையிலும் அபிவிருத்தியடைய வேண்டும். இதற்கான ஆரோக்கியமான சூழல் தற்போது எழுந்துள்ளது. பல்கலைக்கழகத்தின் புதிய உபவேந்தரது துடிப்பான திட்டமிட்ட நடவடிக்கைகளும்அவரது கரங்களைப் பலப்படுத்துகின்ற நிர்வாக உத்தியோகத்தர்களது அர்ப்பணிப்புடன் கூடய சேவையுமே இப் பல்கலைக்கழகம் எல்லா வகையிலும் அபிவிருத்தி அடையக் காரணிகளாக உள்ளன. இவ்வாறு வரலாறு காணாத அபிவிருத்தியைக் கண்டு கொண்டிருக்கும் எமது பல்கலைக் கழகத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் முனைப்புக்கள் மேற்கொள்ளப் படுகின்றன.

இத்தகைய அநாகரீகமான செயற்பாடுகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என அச்சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

## மரணமானவரின்...

சவூதி அரேபியாவின் றியாத் நகரிலுள்ள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள மட்டக்களப்பு நாவற்காட்டைச் சேர்ந்த ஞானச்செல்வம் சிவ'ரூபன் என்பவரின் சடலம் அப்ஹா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள கல்லடி, வேலூர் பிரதேசத்தைச் சேர்ந்த நாகமணி பத்மநாதன் என்பவரின் சடலம் மற்றும் ஜித்தாவிலுள்ள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நற்பிட்டிமுனை பிரதேசத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை ரமணி ஆகியோரின் சடலங்களையே இவ்வாறு இலங்கைக்கு கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவற்றில், இருவரின் சடலங்கள் ஒரு மாதகாலமாகவும் மற்றொருவரின் சடலம் இரண்டு மாதகாலமாகவும் வைத்தியசாலைகளில் வைக்கப் பட்டுள்ளன.

## ஆரையம்பதி...

கடந்த புதன்கிழமை நடைபெற்ற இச் சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராசா, பா.அரியநேத்திரன், மாகாண சபை உறுப்பினர்களான கே.கருணாகரம் (ஜனா), கே.துரைராஜசிங்கம், இந்திரகுமார் பிரசன்னா, எம்.நடராஜா, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதன் போது, மண்முனைப் பற்று (ஆரையம்பதி) பிரதேச சபை எல்லைக்குள் காத்தான்குடி நகர சபையினரால் கடை வாடகை அறவீடு செய்தல், ஒருதொகுதி வீடுகளையும் காணிகளையும் நிருவகித்தல், காத்தான்குடி நகர சபை அத்துமீறி பிரவேசித்து நிருவாகித்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றமை குறித்து நடவடிக்கை எடுக்குமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பால் கேட்கப்பட்டதுடன் இன்னும் பல விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

இதன் போது காத்தான்குடி நகர சபையின் இவ்வாறான செயற்பாடுகள் குறித்து அதன் தவிசாளருக்கு கடிதம் மூலம் அறிவித்து, அதற்கான விளக்கங்கள் கோரப்பட்ட போதும் எந்தவிதமான பதிலும் இல்லை என பிரதேச சபைச் செயலாளர் தொடர்ந்தும் நவடிக்கைகள் மெற்கொண்டு வருவதாகவும் தெரிவித்ததாக மாகாண சபை உறுப்பினர் கே.கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

## எதிபாரா நேரத்தில்....

சனல் 4 காணொளிக் குழுவினரால் நெருங்க முடிந்துள்ளது. கைலாகு கொடுத்துக் கொண்ட காணொளியாளர் உடனடியாகவே போர்க்குற்றம் தொடர்பாக எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாகச் சனாதிபதியின் கருத்தென்ன? என வினவினார்.

கைலாகு கொடுத்தபடியே இவ் விடயம் தொடர்பாகக் கருத்துக்கூற மறுத்த போது சனாதிபதியின் மெய்ப்பாதுகாவலர்கள் சனாதிபதிக்குரிய பாதுகாப்பு வளையத்தை உருவாக்கி விட்டார்கள். எனினும் சனாதிபதி உல்லாச விடுதியை விட்டு வெளிவரும் போது அவருக்கேயுரித்தான பாதுகாப்பு வளையத்தில் ஓட்டையிட்டுக்கொண்டு சனல் 4 ஊடாகவியலாளர்கள் எவ்வாறு உள்நுழைந்தனர் என்பது பற்றிய விசாரணையே நடாத்தப்படவுள்ளது..

## எஸ்.எல்□.ஆர்....

இடம் பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து எஸ்.எல்.ஆர் துப்பாக்கி ஒன்றும், ரவைக்கூடு ஒன்றும், 27 ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் கைது செய்யப்பட்டவர் விசேட அததிரடிப்படயினரால் கல்முனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.

## திருமலை நகரப்...

அடையாளம் காணப்பட்ட பிரதேசங்களில் புகையூட்டல மற்றும் நீர் தேங்கியுள்ள இடங்களில் இரசாயனத் திராவகத்தைத் தெளித்தல் போன்ற செயற்பாடுகளை சுகாதாரத்துறை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவித்த அவர் பொது மக்களின் பூரண ஒத்துழைப்பின்றி டெங்கு நோயைக் கட்டுப்படுத்த முடியாது என்றும் தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் நடமாடும்....

மட்டக்களப்பின் ஏழு பிரதேசச் செயலர் பிரிவுகளில் நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ள இந் நடமாடும் சேவையின் முதல் சேவை நிலையம் வாகரைப் பிரதேசச் செயலகத்திற்குட்பட்ட ஐந்து இடங்களில் கடந்த 11ம் திகதி ஐந்து நிலையங்களில் இச் சேவை நடைபெற்றது. அச் சேவை நிலையங்கள் ஊடாகச் சுமார் 1500 பேர் பயனடைந்துள்ளனர். இரண்டாம் கட்ட நடமாடும் சேவைகள் எதிர்வரும் 26ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.



**மட்டக்களப்பு வின்சென்ட் மகளிர் பாடசாலையின் ஒளிவிழா நிகழ்வுகள்**

( ஜே.தீ.கோபன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநலவாயமும் சனல் 4

அரசாங்கம் கற்பனை செய்வதைப் போலன்றி கொமென் வெல்த் மாநாடு எனப்படுவது அரசாங்கத் திற்கு பாதகமான விளைவுகளைக் கொண்டு வரக்கூடும் என்ற தொனிப்பட தயான் ஜெயதிலக சில மாதங்களிற்கு முன்பு எழுந்தியிருந்தார். அண்மையில் மனோ கணேசனும் இதே தொனிப்பட கொமென்வெல்த் மாநாட்டை ஒரு பொறி என்று வர்ணித்திருந்தார்.

அந்த மாநாட்டையும், அதன் தலைமைப் பொறுப்பையும் ஒரு வாய்ப் பாகப் பயன்படுத்தி அனைத்துலக சமூகம் அரசாங்கத்தை சுற்றிவளைக்க முற்படுவதாக சில மாதங்களுக்கு முன்பு எனது கட்டுரையொன்றில் பிரஸ்தாபித் திருந்தேன். அதாவது, அரசாங்கத்தை முறிக்காமல், வளைத்தெடுப்பதே இந்தியாவினுடையதும், மேற்கு நாடுகளினுடையதும் இப்போதைக்கான நிகழ்ச்சி நிரலாகும். கொமென் வெல்த் மாநாட்டை இங்கு நடாத்துவதன் மூலம் அனைத்துலக அரங்கில் தனது அந்தஸ்தை உயர்த்திக் கொள்வது என்று அரசாங்கம் முடிவெடுத்தபோது அனைத்துலக சமூகத்திற்கு ஒருபிடி கிடைத்தது.

விடுதலைப்புலிகள் இயக்கம் பலமாக இருந்தவரை தமிழ் அரசிய லானது வெளிச்சக்திகளால் இலகு வாகக் கையாளப்பட முடியாத படிக்கு மூடப்பட்டிருந்தது. விடுதலைப்புலிகளைத் தோற்கடிப்பதன் மூலம் அதைத் திறக்க முடியும் என்று அனைத்துலக சமூகம் நம்பியது. அவர்கள் நம்பியது போலவே விடுதலைப்புலிகள் இயக்கம் தோற்கடிக் கப்பட்டதோடு தமிழ் அரசியலானது வெளித்தரப்புக்களிற்கு திறக்கப்பட்டு விட்டது. ஆனால், அதேசமயம், சிங்கள அரசியலானது ஒப்பீட்டளவில் மூடப்பட்டுவிட்டது.

பெருமளவுக்குச் சீனாவுக்கும், ஓரளவுக்கு இந்தியாவுக்கும் சில ஆசிய நாடுகளிற்கும் திறக்கப்பட்டிருக்கும் அளவுக்கு இச்சிறுதீவு மேற்கு நாடுகளிற்குத்திறக்கப்பட்டிருக்கவில்லை. அரசுக்கும் அரசுக்கும் இடையிலான மரபு ரீதியிலான ராஜிய இடை ஊடாட்டங்களைப் பொறுத்தவரை மேற்கு நாடுகள் இந்த அரசாங்கத்தை ஓரளவு க்குக் கையாளக் கூடியதாக இருந் தாலும்கூட மேற்கு நாடுகளின் நிகழ்ச்சி நிரலைத் தங்கு தடையின்றி நிறை வேற்றக்கூடிய நிலைமைகள் இன்னமும் உருவாகவில்லை.

இத்தகையதொரு பின்னணியில் இச்சிறுதீவில் மேற்கு நாடுகளிற்குரிய தெரிவுகள் ஒப்பீட்டளவில் சுருங்கியே காணப்பட்டன.

ஆனால், கடந்த ஜெனிவாக் கூட்டத் தொடரையடுத்து, கொமென் வெல்த் மாநாட்டின் மூலம் அனைத்து லகில் தனது அந்தஸ்தை உயர்த்து வதற்கு இந்த அரசாங்கம் முனைப்புக் காட்டத் தொடங்கியபோது மேற்கு நாடுகளிற்கும், இந்தியாவுக்கும் ஒருபிடி கிடைத்தது போலாகியது.

இலங்கைத் தீவை ஆகக்கூடிய பட்சம் திறக்கலாமா என்று அவை முயற்சிக்கத் தொடங்கின. மேற்கு நாடுகள் தன்னை முறிக்காமல் வளைக்க முற்படுகின்றன என்று இந்த அரசாங்கம் ஓரளவுக்கு நம்பக் கூடிய நிலைமைகள் கடந்த ஜெனிவாக் கூட்டத் தொடரில் காணப்பட்டன. எனவே, தன்னை முறிக்க விரும்பாத மேற்கு நாடுகளிற்கு ஒரு கட்டம் வரையிலும் முறியாமல் வளைந்து கொடுப்பது என்று அரசாங்கம் முடிவெடுத்திருப்பதாகத் தெரிகிறது.

இதனால், மேற்கு நாடுகளைப் பொறுத்த வரை ஒப்பீட்டளவில் முன்னரை விடக் கூடுதலான புதிய தெரிவுகளை உருவாக்கத் தேவையான ஒரு ராஜியச் சூழல் கனியத் தொடங் கியது. இதன் உடனடி விளைவாக கொமென் வெல்த் மாநாட்டை நோக்கியும் அடுத்த ஜெனிவாக் கூட்டத் தொடரை நோக்கியும் அரசாங்கம் வீட்டு




வேலைகளை வேகமாகச் செய்யத் தொடங்கியது. கொமென்வெல்த்மா நாட்டையும், அதன் அடுத்த தலைமைப் பொறுப்பையும் ஒரு தூண்டிலாகப் பயன்படுத்தி அரசாங்கத்தின் பொறுப்புக்கூறும் தன்மையை மேலும் உயர்த்துவதே இப்போதுள்ள அனைத்துலக நிழ்ச்சி நிரலாகக் காணப்படுகின்றது.

இதன் மூலம் அரசாங்கத்தை மெல்ல மெல்ல வளைத்தெடுத்து ஒரு கட்டத்தில் திரும்பச் செல்லவியலாத ஒரு வளர்ச்சிக்கு நிலைமைகளைக் கொண்டு போக முடியுமா என்று அனைத்துலக சமூகம் சிந்திக்கிறது (Ir-reversible – Point) இது ஏறக்குறைய 2002இல் இணைத் தலைமை நாடுகள் சிந்தித்ததிற்கு நிகரானது. சமாதான முயற்சிகளைத் திரும்பிச் செல்லவி யலாத ஒரு புள்ளியை நோக்கிச் செலுத்துவதே அப்போதைய திட்டமாக இருந்தது.

இப்பொழுது அரசாங்கத்தையும் அப்படியொரு திரும்பிச் செல்லவிய லாத எல்லையை நோக்கிச் செலுத்து வதற்கான பிரதான தூண்டிலாகவே கொமென் வெல்த் மாநாடு பார்க்கப் படுகின்றது. சில நாட்களிற்கு முன்பு பிரிட்டிஷ் பிரதமர் தெரிவித்திருந்த கருத்துக்கள் இதைப் பிரதிபலிப் பனவாகக் காணப்பட்டன.

இப்படியாக, அரசாங்கத்தை முறிக்காமல், வளைத்தெடுக்கும் ஒரு அனைத்துலக நிகழ்ச்சி நிரலை அண்மையில் சனல் நாலு வெளியிட்ட காணொளியானது குழப்பியிருக்கிறதா? அல்லது அதுவும் அந்த நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியா?

சனல் நாலு ஒரு சுயாதீன ஊடகம்தான். ஆனால், நிதி மூலதனப் படர்ச்சியாலும், தகவற் புரட்சியாலும் ஓரலகாக்கப்பட்டிருக்கும் இவ்வுலகில் எந்தவொரு ஊடகமும் முழு நிறைவான சுயாதீனத்துடன் செயற்படு வது கடினம். ஒன்றில் சக்திமிக்க நாடுகளின் நிகழ்ச்சி நிரல்கள் குறுக்கிடும் அல்லது உலகளாவிய கோப்பரேட் கொம்பனிகளின் நிகழ்ச்சி நிரல் குறுக்கிடும்.

எனவே, பக்கச்சாராத முழு நிறைவான சுயாதீன ஊடகம் என்று எதுவும் இப்பொழுது கிடையாது. கெடுபிடிப் போர்க்காலத்தில் ஒரு பிரச்சாரப்போர் நிகழ்ந்தது. அந்தப் பிரச்சாரப்போர் எனப்படுவது ஒரு ஊடகப் போர்தான். இதனால், உலகில் அநேகமாக எல்லா [illegible] ஒரு விகிதமளவு[illegible]வப்படுத்தும் ஒரு ஊடகப் பரப்பு அப்பொழுது பேணப்பட்டது. ஆனால், கெடுபிடிபோரின் முடிவுடன் உலக ளாவிய பேரூடகங்களின் ஏகபோகம் உருவாகியது. இதனால், ஒரு துருவ உலக ஒழுங்கிற்கு எதிரான தரப்புக்களை குவிமையப்படுத்தாத ஒரு ஊடகச் சூழல் பலமடையத் தொடங்கியது. உலக ளாவிய பேரூடகங்கள் உருவாக்கிய மாயத் தோற்றத்திற்கு முன்னால் சிற்றூடகங்களாகக் காணப்பட்ட மாற்று ஊடகங்கள் ஒரு எல்லைக்குமேல் பரவ முடியவில்லை. உலகளாவிய பேரூடகங்களின் ஆதிக்கத்தை உடைப் பதற்கு குறைந்த பட்சம் பிராந்திய மட்டத்திலாவது சக்திமிக்க ஊடகங்களின் தேவை உணரப்பட்டது.

இத்தகைய ஒரு காலச் சூழலில் தான் அல்ஜசீரா தோன்றியது. பெரு மளவுக்கு பி.பி.சி.யின் அரபு சேவையி லிருந்து வந்தவர்களை வைத்தே அது உருவாக்கப்பட்டது. கட்டார் அரசு குடும்பத்தின் நலன்களையே அது பிரதி பலித்தது. எனினும், உலகளாவிய ஊடகப் பரப்பில் அது தொடக்கத்தில் ஓர் அரபு அதிசயமாகவே பிரகாசித்தது. பேரூடகங்களின் குவிமையத்துக்குள் வராத ஒரு பிராந்தியத்தை அது பிரதிபலித்தது.

இதனால், “பச்சை ஆபத்துக்கு” எதிராக மேற்குலகம் கொடுத்த யுத்தத்தில் பச்சைத் தரப்பின் குரலாகவும் அது காணப்பட்டது. ஆனால், கட்டார் அரசாங்கத்தின் மீது சக்திமிக்க மேற்கு நாடுகள் தொடர்ச்சியாகப் பிரயோகித்த அழுத்தங்களின் விளைவாக அல்ஜசீராவின் செயற்பாடுகளில் பின்னாளில் ஒருவித தளம்பல் காணப்பட்டதாக ஒரு குற்றச்சாட்டு உண்டு.

அல்ஜசீராவினால் அருட்டப்பட்டு உருவாக்கப்பட்டதே ரெலிசர் (TeleSUR) ஆகும். அது லத்தீன் அமெரிக்கப் பிராந்தியத்தை குவிமையப்படுத்தும் ஓர் ஊடகமாகும். ஒரு துருவ உலக ஒழுங்கின் கீழான ஊடகப் பரப்பில் அல்ஜசீராவையும் சனல் நாளையும் ஒப்பிடுவது இக்கட்டுரையின் நோக்க மல்ல. அது தனியாக, விரிவாகப் பார்க் கப்படவேண்டும்.

ஆனால், ஒரு துருவ உலக ஒழுங்கின் கீழான உலகளாவிய ஊடகப் பரப்பில் ஈழத் தமிழர்களை நோக்கி அனைத்துலகின் கவனத்தைக் குவியச் செய்ததில் சனல் நாலின் பங்களிப்பை வேறெந்த ஊடகங்களுடன் ஒப்பிட முடியாது. அது தமிழ் டயஸ் பொறாவின் ஒரு பகுதியல்ல. அதன் உள் ஆளுமல்ல. (Insider) ஆனால், அது உலகளாவிய தமிழ் லொபியின் பிரிக்கப்படவியலாத ஒரு பகுதியாகவே காட்சி தருகிறது.

தனது பார்வையாளர் பரப்பை அதிகரிக்கும் நோக்கத்துடனான ஒரு வணிக உத்தியாகவே அது ஈழத் தமிழர் பிரச்சினையைக் கையாண்டு வருகிறது என்று ஒரு விமர்சனம் உண்டு. நிதிப்பல முடைய தமிழ் டயஸ்பொறாவின் பின்னணியில் வைத்தே இதை விளங்கிக் கொள்ளவேண்டும் என்று மேற்படி விமர்சனத்தை முன்வைப்பவர்கள் கூறுவதுண்டு. அதேசமயம், அரசாங் கத்தை முறிக்காமல், வளைக்க முற்படும் மேற்கு நாடுகளின் நிகழ்ச்சி நிரலிற்குரிய ஒரு ஊடகக் கருவியே அது என்றொரு விமர்சனமும் உண்டு.

சனல் நாலின் வணிக இலக்கு கள் வெளிப்படையானவை. ஆனால், அதன் அரசியல் இலக்குகள் முழுக்க முழுக்க மேற்கின் நிகழ்ச்சி நிரலைப் பிரதிபலிக்கின்றனவா? ஏனெனில், மேற்குலகமும், இந்தியாவும் இலங்கை அரசாங்கத்தை முறிக்க முற்படவில்லை. வளைக்கவே முற்படுகின்றன.

ஆனால், சனல் நாலு வெளியிட் டுவரும் காணொளிகள் அரசாங்கத்தை முறிக்க முற்படும் தரப்புகளையே மேலும் கொதிப்படையச் செய்கின்றன. அது வெளியிடும் ஒவ்வொரு காணொளியும் தமிழ்க் கோபத்தை ஆய்சலுக்கு ஆய்ச்சல் புதுப்பித்து வருகிறது. தமிழ்க் கோபம் புதுப்பிக்கப்படுவது என்பது இங்கு உற்றுக் கவனிக்கப்படவேண்டிய ஒரு விடயப்பரப்பு ஆகும்.

ஏனெனில், தமிழ்க் கோபம் புதுப்பிக்கப்படும்போது முக்கியமாக அது டயஸ்பொறாவிலும் தமிழ் நாட்டிலுமே வெடித்துக் கிளம்பும். தாயகத்தில் வாழும் தமிழர்கள் தமது மெய் விருப்பங்களை தேர்தல்களின்போது தான் ஓரளவிற்கு வெளிக்காட்ட முடியும். மற்றும்படி, தமது மனக்கொதிப்பை முழுமையாக வெளிக்காட்ட முடியாத ஒரு சூழலே நாட்டில் உண்டு. ஆனால், டயஸ்பொறாவிலும், தமிழகத்திலும் நிலைமைகள் அப்படியல்ல. இத்தகைய பொருட்படக் கூறின் தமிழகத்தையும், டயஸ்பொறாவையும் இப்போதைக்கு தமிழ்த் தேசியத்தின் இரு கூர் முனைகள் எனலாம்.

இவ்வாறு இவ்விரு கூர்முனை களும் கொந்தளிக்கும்போது முக்கியமாக மூன்று தரப்புக்களை அது நெருக்கடிக்குள்ளாக்கும். முதலாவது இந்திய மத்திய அரசாங்கம். இரண்டாவது மேற்குலம். மூன்றாவது மென்சக்திகள் போலத் தோன்றும் தமிழ் மிதவாதிகள்.

முதலாவதாக, இந்திய மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரை இந்திய அரசியலானது தேர்தல் ஆண்டை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் ஒரு காலச்சூழலில் தமிழ் நாட்டின் உணர்ச்சி களை முழுக்கப் புறக்கணித்துவிட்டு முடிவுகளை எடுப்பது கடினம்.

போன ஆண்டில் பாலச் சந்திரனின் படம் ஏற்படுத்திய கொதிப் புடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு இசைப்பிரியாவின் படம் ஏற்படுத்திய கொதிப்புக் குறைவாகவே காணப்படு வதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். கடந்த ஆண்டில் பெற்ற படிப்பினை களின் அடிப்படையில் மாநில அரசாங்கமும், மைய அரசாங்கமும் முன்கூட்டிய தடுப்பு நடவடிக்கைகளில் இறங்கியதும் ஒரு காரணம்தான். தவிர தன்னியல்பான வெகுசன எழுச்சி எதுவும் உரிய தலைமைத்துவத்துடன், நிறுவன மயப்படுத்தப்பட்டு, தொடர்ச் சியாக முன்னெடுக்கப்படாதவிடத்து அது காலகதியில், நீர்த்துப்போகவோ அல்லது அதன் நூதனத் தன்மையை இழக்கவோ அல்லது கூர்கெடவோ கூடிய வாய்ப்புகளே அதிகரிக்கின்றன.

**உலகத்தமிழ்ச் செய்திகள் நிலாந்தன்**

(நன்றி தமிழ்மிரர்) தொடரும்..............

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடைதிறந்த வெள்ளமாக 'மடை'

## கிராமியக் கலைப் பெருவிழா



தமிழர் பாரம்பரியத்தின் தனித்துவத்தினை வெளிப்படுத்தி நிற்கும் பல கட்டுமானப் பணிகளில் களரி அமைப்பும் குறிப்பிடத்தக்கதாகும். பாரம்பரிய அரங்கின் நிகழ்த்துகை அரங்க வெளிகளரியாகும். எமது முன்னோர் தமது வாழ்வியல் சார் தொழில்களை முடித்து விட்டு தாம் ஒன்று கூடி தமது உணர்வுகளைப் பரிமாறிக் கொள்வதற்கான திறந்த வெளியாகக்களரியைஉருவாக்கியுள்ளனர். பார்ப்போருக்கு அடைக்கப்பட்ட அரங்க ஆற்றுகையில் கிடைக்காத உணர்வு வெளிப்பாடும் ஊடாட்டமும் திறந்தவெளி களரியரங்கில் இயல்பாகக் கிடைக்கிறது.

தமிழர் பண்பாட்டு அரங்கக் கட்டுமான வெளியாக இக்களரி முன்னிலைப்படுத்தப்படுகின்றது. சுற்றிக் கட்டப்படும் வட்ட வடிவமான வெளியை எமது முன்னோர் களரி என்றே அழைத்தனர். தமிழர் மத்தியில் இதுவே



வழக்கிலிருந்து வருகின்றது. இவை அமைக்கப்படுவதற்கான அளவுப் பிரமாணங்களும் உண்டு. இக்களரி அமைப்பதற்குரிய கையளிக்கை பாரம்பரிய அரங்க விற்பனர்களுடாக மிகவும் நேர்த்தியாக கிடைக்கும் அதே நேரம்உயிர்த்துவமான செயற்பாடாகவும் அமையும்.

தனியன்களாகச் சிதறிக்கிடக்கும் மக்களை ஒன்றிணைத்து மனித உற வாடலை ஏற்படுத்தும் காத்திரமான ஆற்றுகைக் களமான இக்களரி 21ம் நூற்றாண்டில் இது மிக அவசியமான ஒன்றாகும். சிறுவர்கள், குழந்தைகள், ஆண்கள், பெண்கள், மூத்தகலைஞர்கள், பாட்டன், பாட்டி எனப் பலரும் இயல்பாக ஒன்றிணைந்து தமது உணர்வு வெளிப் பாட்டை பரிமாறுவதற்குரிய வெளியாக எமது முன்னிலையில் இருப்பது கூத்தரங்க வெளியான களரியாகும்.

கூத்துப் பழகி அரங்கேற்றும் வரையும் இந்தக் களரியில் ஊர்மக்களின் இணைவு சிறப்பாக அமையும். கூத்துப் பழகும் இடம் பொதுவாக எல்லோரும் கூடி இருக்கக் கூடிய பொருத்தமான வெளி யாகும். கிராமத்தவர்கள் ஒன்றிணைந்து தமது மகிழ்வு, அறிவு, உறவுப் பரிமாற்றத்தைப் பெறும் இடமாகவும் தாம் கற்றுக் கொண்ட பாரம்பரியத்தை இளம் தலைமுறையி னருக்கு கையளிக்கும் இடமாகவும் இது விளங்குகின்றது. கூத்துப் பழகும் காலத்தில் ஊர்மக்கள் கூத்தர் பற்றி விசாரித்தல், அபிப்பிராயம் கூறுதல் போன்றவை வெளிப்படுவ தோடு, கூத்தரின் ஆளுமை வெளிப் பாடும் தெளிவாக இடம்பெறும். அதாவது அரங்கேற்றுக் களரி வரையும் கலந்துரையாடல் அரங்கப் (Forum Theater) பாணி இங்கு நிகழும். பழகும் கூத்தரும் இந்த அபிப்பிராயங்களைச் செவிமடுத்து ஆடுவர்.

களரியின் கட்டுமானம் கூத்துப் பழகி அரங்கேற்றும் வரையும் மூன்று நிலைகளில் களரி மக்களுடன்இணையும். ஒன்று கூத்துப் பழகுவதற்கான (களரி அடித்தல்) வட்ட வடிவமான இடம். சட்டம் கொடுத்து சதங்கையணி விழா நடைபெறும் வரை இந்த போக்கே காணப்படும். ஊர்மக்கள் சுற்றியிருந்தே பங்குகொள்வர். நவீன நாடகம் பழகுவதைப் போல் இது அமையாது. அடுத்தது சதங்கையணி விழாவிற்குரிய களரியமைப்பாகும். கூத்துப் பழகி ஆடிய அதே இடத்தில் 7-9 கம்பு நடப்பட்டு குருத்துக்களால் ஆன சிறிய அலங்



காரத்துடன் வட்ட வடிவமாக அமைக்கப் படும். இதில் சுற்றி இரண்டு வரியில் கயிறு கட்டப்பட்டிருக்கும். கூத்தர் உள் நுழைந்து ஆடுவதற்கான வாயில் ஒன்றும் வைக்கப்பட்டிருக்கும்.

**விரிவுரையாளர்**
**திரு சு. சந்திரகுமார்.**

தொடரும்................

# எத்தனை காலம் தான்......?

எமது நாட்டின் அரச நிர்வாகத் துறை சீராக இயங்குவதில்லை என்பதனை நிரூபிக்க மக்களிடம் பல ஆதாரங்கள் உள்ளன. உரிய அமைச்சர்களே அதிகாரிகளின் அசமந்தப் போக்கை வெளிப்படையாக கண்டித்துள்ளனர்.

நியமனங்கள்,பதவிஉயர்வுகள், இடமாற்றங்கள், ஓய்வூதியங்கள் என்று அடுக்கிக்கொண்டே போகலாம், இவைகள் அனைத்திலும் எண்ணற்ற குளறுபடிகளும், இழுபாடுகலும் அன்று தொட்டு இன்று வரை இடம்பெற்றுக் கொண்டே இருக்கின்றன.

சிலர் ஓய்வு பெற்றும் ஓய்வூதியம் பெறாமலே இறந்துள்ளனர். அதனால் அவர்களின் குடும்பத்தாருக்கு உரிய நேரத்தில் செலுத்தபடவேண்டிய விதவைகள்,அனாதைகள் ஓய்வூதி யங்கள் பெற உரித்தற்றவர்களாகப் படுகின்றனர். பலரது ஓய்வூதியங்கள் உரிய ஆவணக் குறைப்பாடினால் இழுபறியிலுள்ளன. செலுத்தப்பட வேண்டிய விதவைகள், அனாதைகள் ஓய்வூதி யங்கள் கூட கணவன் இறந்தபின் மனைவிக்கும், மனைவி இறந்த பின் கணவனுக்கும் கிடைக்காமல் போன சம்பவங்கள் பல.

இப்படியே நிர்வாகத்து றையின் குறைபாடுகளினால் அரசாங்க ஊழியர்கள் சொல்லொண்ணா கஷ்ரங்க ளை அனுபவித்து வந்துள்ளனர். இதுவரை அவ்வாறான குறைபாடுகளை தீர்ப்பதற்கு எந்தவித பொருத்தமான நடவடிக்கைகளும் அரசாங்க நிர்வாகத் துறையினால் மேற்கொள்ளப்படாதது கவலைக்குரியதே.

இன்று அரசாங்க சேவையில் 60 வயது வரை சேவையாற்றலாம் என அறிவிக்கப்பட்டிருந்தாலும் மலேரியா தடுப்பு பிரிவின் அந்த ஊழியரின் உடல் நிலை குறைவு காரணமாக அவர் 57 வயதிலே ஓய்வு பெற்றார்.

எப்படியும்ஓரிரு மாதங்களுக்குள் பணிக்கொடையும் (மொத்த தொகை) அதனை தொடர்ந்து மாதாந்த ஓய்வூதியப் பணமும் கிடைக்கும் என்று நம்பி இருந்தார் ஆனால் திடீர் நெஞ்சு வலியால் அவர் அரசினர் வைத்திய சாலைக்கு அனுமதிக்கப்பட்டு எட்டு மணித்தியாலயத்திற்குள் அவர் இவ் உலகை விட்டு போய் சேர்ந்து விட்டார்.

மரணச்சடங்கிற்கான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த அன்று தபால்காரர் பதிவுத் தபால் லொன்றை அவரின் வீட்டாரின் கையில் கொடுத்து விட்டுச் சென்றார். இறந்தவரின் மனைவி கடித உறையை உடைத்துப் பார்த்த பொழுது அங்கே 260000/-க்கான காசோலை ஒன்று இருந்தது.ஆனால் அந்த காசோலையை காசாக்க முடியாது. காரணம் அக் காசோலை இறந்தவரின் பெயருக்கே எழுதப்பட்டிருந்தது.இருந்தாலும் எப்படியோ அப்பணம் கைக்கு வந்து கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அவரின் மூத்த மகள் தனது தாலிக் கொடியை வங்கியில் அடகு வைத்து மரண சடங்கை நடாத்தி முடித்தார்.

இதற்கிடையில் குறித்த காசோலையை பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்திற்கு பாரமளிக்கப்பட்டதையடுத்து அது ஓய்வூதிய திணைக்களத்திற்கு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டது. எப்படியும் ஓரிரு மாதங்களுக்குள் மனைவியின் பெயரில் புதிதாக காசோலை எழுதப்பட்டு ஓய்வூதிய திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்படும் என அறிவுரையும் வழங்கப்பட்டது.

ஆனால்மனைவியின் விபரங்கள் கிடைக்கப் பெற்ற பின்னரே விதவைகள், அனாதைகள் ஓய்வூதியம் அவருக்கு கிடைக்கப்பெறும் என்றும் அதன் பின்னரே திரும்பிச்சென்ற பணிக் கொடை காசோலை மனைவியின் பெயருக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதை எந்தவொரு அதிகாரியும் காலம் சென்றவரின் குடும்பத்தாருக்கு தெரிவிக்கவில்லை. இறந்தவரின் சட்டபூர்வ மனைவி அவர்தான் என்பதை நிரூபிக்காமல் எடுத்த எடுப்பிலே எப்படி மனைவியின் பெயரில் குறித்த காசோலையை வழங்குவது? எனும் கேள்வி அங்குள்ள எவருக்கும் மனதில் எழவில்லை.

அந்த கொடுப்பனவில் ஏற்பட்ட தாமதம், இழுபறி நிலையால் இறந்தவரின் குடும்பத்தில் பூகம்பமே வெடித்தது. 'உங்களை நம்பித்தானே நான் எனது தாலிக்கொடியை அடகு வைத்து பணம் தந்தேன் ஆனால் இன்னமும் அதை எடுத்து தராமல் இருக்கிறீங்களே'? இது தாலிக் கொடியை அடகு வைத்து பணம் கொடுத்த மூத்த மகளின் கடும் கோபம் நிறைந்த கேள்வி 'நீயும் அப்பாவுக்கு ஒரு பிள்ளைதானே, இது உனது கடமை கொஞ்சம் பொறு, காசு வந்ததும் அதை மீட்டுத்தாறன்' இது அந்த தாயின் பதில் அப்படியிருக்க மூத்த மகளின் கணவர் சும்மா இருப்பாரா மனைவியை பார்த்து அவர் கூறுகிறார் "இது நான் உனக்கு வேண்டின தாலிக்கொடி, நீ வரக்க என்ன கொண்டு வந்த நீ? வெறும் கழுத்தோட வந்த போட்டு கொடை வள்ளல் மாதிரி நீ ஏன் தாலிக்கொடியை அடகு வைக்க வேணும்?

இப்படியே ஆளுக்காள் நாளாந்தம் முட்டி மோதிக்கொள்வது சகஜம். அந்தப் பிரச்சனை அவ்வூர் சமாதான நீதவான் ஒருவரின் காதில் எட்டியது. அவரும் ஓய்வு பெற்றக் அரசாங்க உத்தியோகத்தர். அக் குடும்பத்தின் நிலையை அறிந்து உதவி செய்ய முன்வந்தார். அவர் ஊரில் மாத்திரமல்ல இந்த நாட்டிலும் மிக செல்வாக்குமிக்கவர்.

தனது அரசியல் செல்வாக்கை உபயோகித்து இறந்தவரின் மனைவிக்கு நிலுவையுடன் ஓய்வூதியத்தை பெற்று கொடுத்தார். தற்பொழுது அக் குடும்பத்தின் பிரச்சினையில் அரைவாசி குறைந்து விட்டது. ஆனால் திரும்பிச் சென்ற பணிக்கொடை காசோலை இதுவரை வந்தபாடில்லை இருப்பினும் சமாதான நீதவான் தனது முயற்சியை கைவிடவில்லை கொழும்புக்கு போனால் பிரச்சினையை சுமுகமாக முடிக்கலாம் ஆனால் பூனைக்கு மணி கட்டுவது யார் என்பது தான் அந்த குடும்பதிலுள்ள இன்றைய பிரச்சினை.

அதாவது கொழும்பு ஓய்வுதிய திணைக்களத்திற்கு சென்று அங்குள்ள அலுவலக ஊழியரில் இருந்து உயர் அதிகாரிவரை முறையாக கவனித்தால் எல்லாம் சரிவரும் எமது பேச்சு வழக்கில் கூறுவது போல் அங்குள்ளவர்களுக்கு வாய்க்கரிசி போட்டால் கையிலே காசோலையை கொண்டு வரலாம்.

அதற்கும் அந்த குடும்பத்தில் அப்படியொரு காரியத்தை செய்யக் கூடியவர்கள் ஒருவரும் இல்லை. மொழிப்பிரச்சினை ஒரு தடை, அதைவிட பணப்பிரச்சினை அடுத்த தடை, அதனால் கொழும்புக்குச் சென்று காரியம் பார்ப்பது என்பது ஒரு கஷ்ரமான காரியமே அந்த குடும்பத்தில் சிங்களம் தெரிந்தவர் ஒருவரும் இல்லை அப்படி தெரிந்தாலும் விசயம் தெரிய வேணுமே.

அதற்குள் அந்த வீட்டில் பிரச் சினை முற்றிவிட்டது. தாயாரின் ஓய்வூ தியப் பணத்தை அவரின் பிள்ளைகள் சுரண்டத் தொடங்கி விட்டனர். அது மாத்திரமல்ல "உங்கட அம்மாட்டப் போய் தாலிக் கொடியை மீட்டுவராமல் வீட்டுப் பக்கம் வரவேணாம்?" என மருமகன், மூத்தமகளை துரத்திப் போட்டார். இதனால் அவர் அம்மாவின் வீட்டுக்கு வந்து சேர்ந்து விட்டார்.

இந்த விடயங்கள் எப்படியோ ஊரார் மூலம் சமாதான நீதவான் காதுக்கு எட்டியது அவருக்கும் பெரும் கவலை. என்ன செய்வது அரசாங்க திணைக்களங்களின் நடவடிக்கை மிக மந்தகதி என்பது புதிய விடயமல்ல. எந்த அலுவலகத்திற்குச் சென்றாலும் அதே நிலைமைத்தான்.

அவர் பிரச்சினைக்குரிய வீட்டுக்கு சென்று அனைவரையும் அழைத்து ஒரு குட்டி மகாநாடொன்றை நடத்தினார். அவர் அங்கு தெளிவு படுத்தியவிடயம் திணைக்களங்களு டைய விதிமுறைகளைப் பற்றியே அத்துடன்"சற்று பொறுமையாகஇருக்கும் படியும், எப்படியும் இந்த மாதத்திற்குள் காசோலைவந்துவிடும்"என்றும் கூறினார்.

அந்த குடும்பத்தினர் மிகவும் வறுமையானவர்கள்.அங்கு அரசாங் கத்தில் வேலை செய்பவர்கள் ஒருவருமே இல்லை.ஆனால்அலுவலக விடயங் களைப் பற்றி அவர்களுக்கு ஒன்றும் தெரியாது அவர்கள் தத்தமது பிரச்சினை களை ஆளுக்காள் உரத்திச் சத்தம் போட்டு முரண்படுவதிலே காலத்தை செலவழித்தனர். நல்ல வேளை அந்த பெரிய மனிதரான சமாதான நீதிவான் குறித்த விடயத்தில் தலைப் போடா விட்டால் அங்கு கொலையே நடந்திருக்கும். அவர் அவர்களின் நிலைமையே புரிந்து கொண்டு குறித்த காசேலையை கூடிய விரைவில் அக்குடும்பத்தி னருக்கு பெற்றுக் கொடுத்து அங்குள்ள சகல பிரச்சினைகளையும் தீர்த்து வைத்தார்.

## ...நாட்டு நடப்பு...

அப்பிரச்சினையில் அவர் தலையிட்டதால் அது சுமுகமாக முடிந்தது. வேறு யாரும் ஒருவர் தலையைப் போட்டிருந்தால் மேலும் சிக்கலை உருவாக்கி இருக்கும். அதாவது உதவி செய்கிறேன் எனக் கூறிவருபவர் தானும் சுருட்டக் கூடியதை சுருட்டி கொண்டு சென்று இருப்பார். இறந்தவரின் மனைவி மேலும் பணத்தை வட்டிக்கு வேண்டி அதற்காக செலவழிக்க நேர்ந்திருக்கும்.

நம் மத்தியில் உள்ள பிரச்சினைகள் ஒன்றா? இரண்டா? சொல்லி முடிப்பதற்கு நமக்குவந்து குவியும் ஆசைகள் போன்றே வாழ்க்கையில் பிரச்சினைகளும் நாளுக்கு நாள் வந்து குவிந்துகொண்டே இருக்கும். துணிவே துணை.

- துட்டகைமுனு -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரசுராம பூமி

சிறுகதை

காற்றைக் கிழித்துக் கொண்டு வானில் பரவிய பொஸ்பரஸ் குண்டுத்துகள்கள் யுத்தத்தால் சிதறி, சின்னாபின்னமாக்கப்பட்டு கிடந்த பொதுமக்கள் கூடாரங்கள் மேல் விழுந்து சிதறின. உடனே கூடாரங்கள் தீப்பற்றிக் கொண்டன.

அதனைத் தொடர்ந்து எங்கிருந்தோ வந்த ஆட்டிலறி குண்டுகளும், மல்டிபரல் குண்டுகளும், கட்டிடங்கள் மீதும், தற்காலிகமாக அமைக்கப்பட்ட மருத்துவமனைகள் மீதும், மக்கள் தம் உயிர்காக்க பதுங்கியிருந்த பதுங்கு குழிகள் மீதும் விழுந்து தொடர்ச்சியான ஒரு வெடிப்பதிர்வை ஏற்படுத்தியது.

நூற்றுக்கு மேற்பட்ட பொது மக்கள் சவங்களாய் சரிய கை, கால்களை இழந்து, காயப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களின் செந்நீர் மண்ணோடு மண்ணாக கலந்து முள்ளிவாய்க்கால் மண் சிவந்த மண்ணாகிக் கொண்டிருந்தது.

## ஓலங்கள்! எங்கும் ஓலங்கள்!!

நீண்ட துயில் கொண்டிருந்த பரசுராமர் கண் விழித்தார். தொடர்ச்சியான ஓலங்களின் பெரும் சப்தம் அவரது உறக்கத்தை சில நாட்களாகவே கலைத்துக் கொண்டிருந்தது.

அண்ட பெருவெளியின் எங்கோ ஒரு மூலையில் இருந்து காற்றின் கரங்களால் துரத்தப்பட்டு அவரது செவிப்பறையில் மோதும் கணவனை இழந்த பெண்களின் ஓலம், பெற்றோரை இழந்த குழந்தைகளின் ஓலம், பிள்ளைகளை பறி கொடுத்த பெற்றோரின் ஓலம், சகோதரியை இழந்து, சகோதரனை இழந்து, தவிக்கும் ஓலம், கட்டிய மனைவியைப் பிரிந்து கைக்குழந்தைகளுடன் 'இனிமேல் என்ன செய்வது?' என தவிக்கும் கணவன்மார்களின் ஓலம்.

மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போல், பெரும் காற்றால் அணையப் போவதாய் அல்லாடும், விளக்கினைப் போல் உயிர் மூச்சைக் கையில் பிடித்தபடி உயிருக்கு தவிக்கும்.

இந்த வேளைகளிலும், தம் பிள்ளைகளை "போராட வா" என இழுத்துச் செல்லும் இயக்கத்தினரை நோக்கிய அப்பாவி பெற்றோரின் ஓலம்! ஓலம்!! எங்கும் ஓலம்! ஒப்பாரிகளின் தேசமாக மாறிப்போன மண்ணின் ஓலம்.! நவீன விஞ்ஞான சாதனைகளின் ஓர் அம்சமான hpரோசிமா நாகசாகி போல் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும்

வன்னி மண்ணின் ஓலம்! இதென்ன பரசுராமருக்கு புதிதா? குருஷேத்திரப் போரில் அவர் பார்க்காத இழப்புக்களா என்ன? கோடிக்கணக்கில் மடிந்த போர்வீரர்களின் எண்ணிக்கை தெரியாதவரா என்ன? இருபத்தொரு தலைமுறை சத்திரியர்களின் குருதியை குடித்த அவரது மழுவிற்கு இந்த இரத்த அபிஷேகம் தூசு அல்லவா?

ஓலங்கள்.... அவரது காதின் செவிப்பறையை தட்டியதை விட



பரசுராமரின் மனக்கதவுகள் அதிரத் தொடங்கியது. ஓலங்கள் வெறுமனே ஒப்பாரிகளாக இல்லாமல் அதில் ஏதோ ஒரு செய்தி அவருக்கு தெளிவாக கேட்டது.

"இருபத்திரெண்டாவது தலைமுறை... இருபத்திரெண்டாவது தலைமுறை" என ஏதோ ஒரு மந்திரச் சொல் அவரது மனச்சாட்சியை தொடர்ச்சியாக குத்திக் கிளறியது.

வாயுதேவன் பரசுராமரை நித்தியமும் சிந்திக்க விடாமல் செவிப்பறையை தொடர்ச்சியாக தாக்கிக் கொண்டிருந்தான். இந்த ஓலங்கள்.... யாருடைய ஓலங்கள்.....? ஏன் என் செவியில் வந்து விழ வேண்டும்? அதுவும் இத்தனை நூற்றாண்டுகளுக்கு பிறகு.

ஏதோ ஒன்றின் நீட்சியாக அவரைக் குறிவைத்து தாக்குவதைப் போன்ற ஓர் உணர்வு அவருக்குள் ஆயிரம் ஆயிரம் கேள்விகளை எழுப்பியது. இருபத்தொரு தலைமுறை போதாதென்று மணக்கோலத்தில் வந்த இராமனிடம் போர் செய்யப் போய் தனது தவ வலிமை இழக்கப்பட்டதும் அதன் பிறகு ஏற்பட்ட ஞானஉபதேசம்.

அந்த நிகழ்விற்குப் பின் எனது "மழு" எந்த ஒரு சத்திரியனையும் கொல்லவில்லை. ஆனால் சில நாட்களாக எனது செவிகளில் விழும் "இருபத்திரெண்டாவது தலைமுறை" என்ற அந்த ஒலி எங்கிருந்து வருகின்றது. தலையை பிய்த்துக் கொண்ட பரசுராமர் மீண்டும் ஓர் முறை தனது சாபங்களை மீட்டிப் பார்க்க தொடங்கினார்.

தர்மதேவதை அவரைப் பார்த்து நகைப்பது அவருக்குத் தெரிந்தது. அவளது மகனை, ஆம் தர்மத்தின் மகனை சாபம் கொடுத்து கொன்றவராயிற்றே, தன் உறக்கம் கலையாதிருக்க வலி தாங்கிய கர்ணனுக்கு அவனது குலத்தை அறியாமலேயே, தான் கொடுத்த சாபம், யுத்தக் கலைகளை கற்பித்துவிட்டு "யுத்தத்தின் போது கற்ற கலைகள் யாவும் மறந்து போகட்டும்" என்று சாபம் கொடுப்பது ஓர் குருவின் இலட்சணமா...?

அதனை விட அன்று அவனைக் கொன்றிருக்கலாமே...? அல்லது தனது ஞான சிருஷ்டியால் அறிந்து அவனுக்கு கலைகளை போதியாமல் விட்டிருக்கலாமே? தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்ற தாரக மந்திரத்துக்கு கட்டுண்டு பெற்ற தாயை கொலை செய்ததும், அதற்காக தந்தை தந்த வரத்தைக் கொண்டே தாயை உயிர்ப்பிக்க கேட்டதும்.

எல்லாமே அவசர புத்தியால் வந்த வினை. முன்யோசனையின்றி தனது வீரத்தையும் தவ வலிமையையும் பெரிதென எண்ணி தன்னிச்சையாக எடுத்த முடிவுகள்.

மோனநிலையில் இருந்த பரசுராமரின் செவிகளில் மீண்டும் அந்த ஓலங்கள் பெரிதான அலறலாகக் கேட்கத் தொடங்கியது. " காப்பாற்றுங்கள், எங்களைக் காப்பாற்றுங்கள்...." பெரும் சப்தம் பரசுராமரை மட்டுமல்ல அவரது புரவியையும் அசைக்கத் தொடங்கியது.

அவர் தட்டி விடாமலேயே அது அவரையும் சுமந்து கொண்டு அந்த ஓலங்கள் வந்த திசைநோக்கி பறக்கத் தொடங்கியது.

காடுகள், மலைகள், கடல்கள், என புரவி பலகாத தூரம் கடந்து இறுதியாக வன்னிமண்ணின் பெருநிலப் பரப்பில் வந்துநின்றது.

யுத்தத்தின் சத்தங்கள், வெடிப்யோசைகளின் அதிர்வுகள் பரசுராமரை பயங்கொள்ள வைத்தது. இது அவர் காணாத யுத்த களம். குருஷேத்திரப்போரை விட கொடூரமான யுத்த களம். அந்த யுத்தத்தில் நேர்மை இருந்தது. ஆனால் இங்கு....?

தன்னால் இருபத்தியொரு தலைமுறை சத்திரியர்கள் கருவறுக்கப்பட்டு நரமேத யாகம் செய்து அவர்கள் குருதியைக் கொண்டு உண்டாக்கிய "சமந்த பஞ்சம்" என்ற இடத்தில் நடைபெற்ற வீம துரியோதன யுத்தத்தில், யுத்த விதிமுறைகளுக்கு மாறாக துரியோதனனை கதையால் வீமன் தொடையில் அடித்துக் கொன்றான் என்பதற்காக பாண்டவர்களின் தேரோட்டியாக தன் தம்பி போர் புரிந்தாலும், வீமனுக்கு எதிராக பலராமர் போர் புரிய தயாரான யுத்த களம் அல்லவா குருஷேத்திரம்.

இங்கே யுத்த விதிமுறைகள், யுத்த தத்துவங்கள், அவருக்கு ஒன்றுமே விளங்கவில்லை. இது யாருடைய யுத்தம்? எந்த இரண்டு அரசுகள் தமக்குள் மோதுகின்றன என்பதே அவருக்குப் புரியாத புதிராக இருந்தது.

ஆனால் இதுவும் ஒரு குருஷேத்திரப் போரின் நீட்சியாகத் தொடர்கின்றது என்பது மட்டும் அவருக்கு புரிந்தது. ஒருபக்கம் அவரது பெரும் தேசம் உட்பட, உலக வல்லரசுகளும் ஒன்று சேர்ந்து ஒரு மக்கள் கூட்டத்தின் மீது போர் தொடுப்பதாகப்பட்டது.

இவர்கள் யார்....? இவ்வளவு பெரிய படையெடுப்புடன் மோதும் இவர்கள் யார்..? .அவரது ஞானக் கண்கள் அகலத்திறந்தன. ஆயுதங்களுடன் ஓடித் திரியும் அந்த இளைஞர்கள் யார்....? திகைத்துப் போனார் பரசுராமர்.

சில வருடங்களுக்கு முன்னால் தனது தேசத்தில் தனது தேசத்த வர்களால் ஊட்டி வளர்க்கப்பட்ட இவர்கள் மீது.... இன்று எனது தேசமே முன்னின்று போர் தொடுப்பதா...?

யுத்ததந்திரங்கள் சொல்லிக் கொடுத்து, ஆயுதங்கள் அள்ளிக் கொடுத்த எனது தேசமே இவர்கள் மீது போர் தொடுப்பதா? நான் கர்ணனுக்கு செய்ததை எனது தேசம் இவர்களுக்கு செய்கிறதா...?

இது எனது பாரத தேசத்தினதும், எனதும் சாபக்கேடா? புண்ணிய தேசம் என்பதும், மகான்களின் தேசம் என்பதும் வெறும் வெற்று வார்த்தைகள் தானா?

சத்திரியர்களின் இருபத்தியொரு தலைமுறைகளை நான் வேர் அறுத்தேன். இருபத்திரெண்டாவது சத்திரியர்களின் தலைமுறைகளை எனது தேசம் வேர் அறுக்கின்றதா...? தன் மீதும் தனது தேசத்தின் மீதான கோபமும் அவரது கண்களை சிவக்கச் செய்தது.

வெட்கத்தில் தனது தாடி மயிர்க்கால்கள் ஒவ்வொன்றாக உதிர்ந்து விழுவது போன்ற பிரம்மை அவரை வாட்டி வதைத்தது. பரசுராமர் தனது மழுவை எடுத்து காறித் துப்பிவிட்டு தூரத்தே எறிந்தார். அது நந்திக் கடல் பெரு வெளியில் காணாமற் போனது.

அவரது புரவி அவரையும் சுமந்த கொண்டு வெள்ளைக் கொடி போர்த்திய உடலங்களின் நடுவே பாய்ந்தோடி வன்னிக் காட்டுக்குள் காணாமல் போனது.



மைக்கல் கொலின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை, இலக்கிய விழாக்கள் ஒரு கருப்பொருளை மையப்படுத்தியதாக நடாத்தப்பட வேண்டும்.



கடந்த 2008ம் ஆண்டு கிழக்கு மாகாண சபையை மக்கள் பிரதிநிதிகள் தலைமையேற்ற வழிநடாத்தி வருவதன் பின்னர் கிழக்கு மாகாணத்தில் மாகாண மட்டத்தில் நடைபெறும் இலக்கிய விழாக்கள் மிகவும் விமர்சையாகவும், பல்வேறு சிறப்பம்சங்களை உள்ளடக்கி யதாகவும் நடாத்தப்பட்டுக்கொண்டு வருகின்றன. கலை நிகழ்ச்சிகள், இன ரீதியாக எல்லா இனத்தவர்களினதும் கலையம்சம்கள் மேடையேற்றப்படுதல், கலைஞர்கள் கௌரவிப்பு, எழுத்தா ளர்கள் கௌரவம் என பல்வேறு அம்சங்கள் ஆண்டு தோறும் இந்நிகழ்வில் இடம்பிடிக்கின்றன. கலாசார உத்தியோகத்தர்கள், பண்பாட்டு திணைக்களம் என்பன மிகக்குறுகிய நிதியுடன் இவற்றை செய்து வருவது பாராட்டத்தக்கது.

இன்று நடைப்பெற்றுக் கொண்டிருக்கும் கலை விழாவில் கலை நிகழ்வை விட்டு பேச்சை கேட்பதற்கு எவருக்கும் மனம் இருக்காது என விளங்கிக்கொண்டு பல அதிதிகள் வருகை தராத இவ்வேளையில் அவர்களுக்காகவும் சேர்த்து எனது கருத்தை மிகச் சுருக்கமாக முன்வைக்க முனைகின்றேன்.

கலை என்றால் என்ன? கேள்வியுடன் எனது பேச்சை தொடங்குகின்றேன். இதற்கு விடையளிக்க பேரறிஞர் அண்ணாதுரையை உதவிக்கு அழைத்துக்கொள்கின்றேன். அவரது கூற்றுப்படி கலை என்றால் "முறைப்படுத்தப்படுதல்" எனும் பொருள் ஆகும். உதாரணமாக நடனம் முறைப்படுத்தப் பட்டால் அது நடனக்கலை, பேச்சு முறைப்படுத்தப்பட்டால் அது பேச்சுக் கலை, சமையல் முறைப்படுத்தப்பட்டால் அது சமையல் கலை, நிர்வாகம் முறைப் படுத்தப்பட்டால் அது நிர்வாக கலை என கூறலாம். முறைப்படுத்துவதற்காக வாழும்கலை எம்மிடையே பிரபல்யமாக இருப்பதை நாம் காணலாம்.

இன்றைய உலகில் உலக வளர்ச்சி என்று கூறி வெறும் பொருளாதார வளர்ச்சியை மாத்திரம் தான் என எம்மில் அநேகர் விளங்கிக்கொண்டுள்ளனர். ஒரு ரயில் பயணத்திற்கு இரு தண்வாளங்கள் இருப்பது போல் உலக வளர்ச்சியிலும் இரு தண்வாளங்கள் உண்டு. ஒன்று பொருளாதார வளர்ச்சி, அடுத்தது சமூக சீர்கேடுகள் பெருக்கம். வளர்ந்த நாடுகள் பலவற்றை நாம் பார்க்கும்போது இவற்றை நாம் அவதானிக்கலாம். மனித உரிமை எனும் பெயரில் ஓரினச் சேர்க்கை, ஒரு பால் திருமணம், பாடசாலை மாணவர்களே ஆயுதத்துடன் பாடசாலைக்கு செல்லல் போன்ற விடயங்கள் அந்நாடுகளில் சர்வசாதாரண விடயங்களாகி விட்டன.

கீழைத்தேச நாடான இந்தியா மிக வேகமாக பொருளாதார வளர்ச்சியடைந்து வருகின்றது. அங்கு அண்மையில் பஸ் ஒன்றில் பல்கலைக் கழக மாணவி ஒருத்தி ஐந்து இளைஞர்களால் பஸ் ஒன்றில் வைத்து கற்பழிக் கப்பட்டு கொலை செய்யப்பட்ட விடயம் உலகத்தையே கலங்க வைத்தது. அதாவது கீழைத்தேச கலாசாரத்திற்கு மையமாகவுள்ள அங்கும் கூட ஒரு புறத்தில் சமூக சீர்கேடுகள் பொருளாதார வளர்ச்சியுன் கூடிவருவதை நாம் காணலாம்.

எமது நாட்டை பொறுத்தவரை இரு சம்பவங்கள் எமது மாகாணத்தை கலங்க வைத்தது. அண்மையில் திருமலையில் கட்டிய கணவனையே கொல்வதற்கு மனைவி உடந்தையாக வெளிநாட்டில் இருந்து கொண்டு செயற்பட்டுள்ளதாக பத்திரிகை வாயிலாக அறிய முடிகின்றது. அதே வேளை மட்டக்களப்பு மாவட்டத்தை பொறுத்தவரை அண்மையில் செங்கலடி பிரதேசத்தில் தனது காதலுக்காக தனது பெற்றோரை கொல்வதற்கு சொந்த மகளே காரணகர்த்தாவாக இருந்துள்ளதை நாம் கண்டோம். இந்த சம்பவங்கள் நாமும் இரு தண்டவாளங்களினூடாக உலக வளர்ச்சியுடன் இணைகின்றோம் என்பதையே புலப்படுத்துகின்றது.

மிருகவதையை தடை செய்துள்ள எமது நாட்டில் நடந்துள்ள இரு சம்பவங்களும் எம் எல்லோருக்கும் ஒரு தண்டவாளத்தை ஞாபகப்படுத்துகின்றது. இவ்வேளையில் தான் எமது பண்பாட்டு திணைக்களத்தினரும், கலாசார உத்தியோகத்தர்களினதும் பணியின் அவசியத்தை எமக்கு வலியுறுத்துகின்றது.

எனவே இவ்வேளையில் தண்டவாளத்தை காய்ச்சி பதனப்படுத்துவோராகவும், சமுதாயத்தை முறைப் படுத்து வோராகவும் மாற வேண்டிய பணி எம் எல்லோருக்கும் உண்டு. குறிப்பாக கண்ணகிக்கு விழா எடுக்கும் இவ்வேளையில் கலாசாரத்துடனும். சமூக உணர்வுடனும் ஈடுபடும் சகலரும் அரசாங்கத்தை மாத்திரம் நம்பியிராது சித்தார்த்தர், முகம்மது நபி, கண்ணகி வழியை பின்பற்றி சமூதாயத்தை முறைப்படுத்த முனைய வேண்டும். இதன் மூலம் எதிர்காலத்தில் சமுதாயத்தில் கடவுளாக மதிக்கப்பட் உங்களுக்கும் இடம் வரலாம்.

அத்துடன் வருடா வருடம் நடாத்தப்படும் இலக்கிய விழாக்கள் திட்டமிடப்பட்ட வகையில் ஒரு கருப்பொருளை மையமாக வைத்து, அதாவது அன்பு, இன நல்லுறவு, உழைப்பு, விட்டுக்கொடுப்பு, பகிர்ந்து கொள்ளல் போன்ற விடயங்களை மையமாக வைத்து நடாத்துவதன் மூலம் ஒரு வருடம் முழுவதுமாக அக்கருப் பொருளின் ஆதிக்கத்தில் கலாசாரத் துறையினரும், சமுதாயமும் ஈடுபட வாய்ப்பு உண்டு. இல்லையேல், தினசரி பத்திரிகையில் இடம் பிடிக்கும் செய்தியாகத்தான் இவ்விழாக்கள் தொடர்பான செய்திகள் வருமேயொழிய சமுதாயத்திற்குள் எந்தவித நல்ல கருத்துக்களும் விதைக்கப்பட வாய்ப்பில்லை.

*குறிப்பு: கடந்த 01.11.2013ஆம் திகதி மட்: சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடாத்திய கலை இலக்கிய பெருவிழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கிழக்கு மாகாணசபை பேரவைச் செயலாளர்கணபதிப்பிள்ளைகருணாகரன் (இலங்கை நிர்வாக சேவை விடே தரம்) ஆற்றிய உரை*

கிழக்கு மாகாணசபை பேரவைச்
செயலாளர்
**கணபதிப்பிள்ளை கருணாகரன்**

## நிதி நிறுவனங்கள்.

நிலையில் திருமலையில் அவர் பங்குகளை வாங்கி முதலீடு செய்த பதிவுசெய்யப்பட்ட நிதி நிறுவனமும் மூன்று வருடங்களாகியும் பங்கு இலாபம் எதனையும் வழங்கவில்லை. அதை காட்டிலும் பரிதாபம் அந்த நிறுவனத்தின்பங்குகளின் சந்தைப் பெறுமதி முகப்பெறுமதியின் நான்கில் ஒன்றின் கீழ் வீழ்சியடைந்திருந்தது. நிலையான வைப்பின் மூலம் ஒழுங்காக மாத வட்டியை பெற்றுக்கொண்டிருந்த சித்தார்த்தனுக்கு பெரும் கவலையும் ஏமாற்றமுமாகபோய்விட்டது.

நிறுவனத்தின் முகாமையாளரை அணுகி தனது பரிதாப நிலையை கூறி கண்ணீர் வடித்தார். நிறுவனத்தின் சார்பில் பொது மக்களின் நிலையான வைப்பில் இருந்த பணத்தை பங்குகளில் முதலீடு செய்ய தூண்டுவதற்கு காரணமாக இருந்ததே அம் முகாமையாளரின் பசப்பு வார்த்தைகளே! திருக்கோணமலை மாவட்டத்திலேயே பொதுமக்களின் பல மில்லியன் ரூபாக்கள் பறிபோயிற்று.

அவர்களில் சித்தார்த்தனும் ஒருவராகிவிட்டார். அந்நிறுவனம் நட்டத்தில் ஓடுவதை அம்முகாமையாளர் நன்கு உணர்ந்திருந்தார். ஆனாலும் அவர் மக்களுக்கு பெரும் துரோகம் செய்தும் நிறுவனத்திற்கும் தனது பதவிக்கும் முண்டு கொடுப்பதையே தனது ஒரே நோக்கமாககொண்டிருந்தார்! இப்போ சித்தார்தனுக்கு முகம் கொடுக்க முடியாத நிலையிலும் மீண்டும் அவரை தவறாக வழிகாட்டி நிறுவனம் குற்றஞ்சாட்டப்படுவதைதவிர்க்க முயன்றார்.

ஐயா, என்னால் உங்களுக்கு நிச்சயமாக உதவி செய்ய முடியும். நீங்கள் சம்மதித்தால் உங்கள் பங்குகளை விற்று அதிக இலாபம் தரும் நிதி நிறுவனங்களில் மாறி மாறி முதலிடு செய்வதன் மூலம் உங்கள் முதலை நீங்கள் மீண்டும் அடையலாம்.ஒரு குழந்தைப்பிள்ளைகூட புரிந்துகொள்ளும் இது ஒரு ஏமாற்று என்றுபொது மக்களுடன் பெரும் நிதி கொடுக்கல் வாங்கல்களை செய்த சித்தார்த்தன் இந்த ஏமாற்றைக் கூட புரிந்து கொள்ள மாட்டாரா? எனது பங்கின் முகப்பு



பெறுமதியை நீங்கள் தருவீர்களா? சித்தார்தனின்இந்த கேள்வி முகாமையாளரை வாயடைக்கச் செய்தது.

இவ்விடயம் சம்மந்தமாக தொடர்புகொள்ள அந்நிறுவனத்தின் சிரேஸ்ட உத்தியோகத்தர்களின் விலாசத்தை முகாமையாளரிடம் இருந்து பெற்றுக்கொண்டு தள்ளாடியபடி வெளியேறினார் சித்தார்த்தன்.ஒரு சட்டத்தரணியின் உதவியுடன் கொழும்பில் இயங்கும் தலைமையகத்தில் இருந்து செயல்படும் பிரதான நிறைவேற்றுஅலுவலருக்குஆங்கிலத்தில் மனு ஒன்று அனுப்பப்பட்டது.அதில் தனது வயது, சுகயீனம், ஏழ்மை ஆகியவற்றை குறிப்பிட்டு தனக்கு பங்கு இலாபம் தரும் படியும் அல்லது பங்கின் முகப்புபெறுமதியை மீள செலுத்துமாறும் சித்தார்தன வேண்டியிருந்தார்.

கடிதத்தின் பிரதிகள்,வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கும் அனுப்பப்பட்டது.பணிப்பாளர் அக் கடிதத்தின் பிரதியை நிதி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலருக்கு அனுப்பிவைத்ததுடன் சித்தார்த்தனுக்கு தனது கடிதத்தின் பிரதியையும் சமர்ப்பித்திருந்தார். இரு மாதங்களாகியும் நிதி நிறுவனம் எந்த பதிலும் அனுப் பாததுடன் கடிதம் கிடைத்தாகவும் காட்டிக்கொள்ளவில்லை. சித்தார்த்தன் ஒரு நினைவூட்டல் கடிதத்தினை அதே பாணியில்அனுப்பியிருந்தார். அப்போதும் வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்கள பணிப்பாளர், அவசிய நடவடிக்கையின் பொருட்டு என்ற குறிப்புரையுடன் அக்கடிதத்தை நிதி நிறுவனத்திற்கு அனுப்பி வைத்ததுடன் சித்தார்த்தனுக்கு பிரதியையும் சமர்ப்பித்திருந்தார். ஆனால் நிதி நிறுவனம் தனக்கும் அக்கடிதத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பது போல் மௌனம் சாதித்தது.

சித்தார்த்தன் திருமலைக் கிளை முகாமையாளரை சந்தித்து அதற்கான விளக்கத்தை கேட்ட போது அவரது கடிதத்திற்கான பதிலை அனுப்புவது குறித்து தலைமை அலுவலகத்தில் உயர் மட்டத்தில் ஆராய்ந்து வருவதாக விடையளித்தார்.சித்தார்தனின் வருத்த நிலை அதிகரித்து வந்தது.

வருவாய்முற்றாக முடங்கி விட்டது. மீண்டும் சித்தார்தன் வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மேற்பார்வைத்திணைக்களபணிப்பாளருக்கு நேரடியாக ஒரு முறைப்பாட்டை அனுப்பிவைத்தார்.உண்மையில் அக்கடிதத்தில்குறிப்பிட்ட முறைப்பாடுகளை ஆராய்ந்து பதில் ஒன்று தனக்கு அனுப்பப்படும் என்று எதிர்பார்த்திருந்த சித்தார்த்தன் ஏமாற்றம் அடைந்தார்.பழைய பாணியிலேயே அக் கடித பிரதி ஒன்று அவசிய நடவடிக்கையின் பொருட்டு என்ற குறிப்புரையுடன் நிதி நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு சித்தார்த்தனுக்கு பிரதி வந்தது. சித்தார்தனின் அனைத்து நம்பிக்கைகளும் சிதைந்தன!சித்தார்த்தன் திருக்கோணமலையில் உள்ள மத்திய வங்கியின் கிழக்கு மாகாண கிளைக்கு சென்று முறைப்பட்டார்.

முகாமையாளர் ஒரு துண்டு பிரசுரத்தை அவருக்கு கையளி த்தார். அவதானமாக இருங்கள் என்ற தலைப்பின் கீழ் மக்களுக்கு மூன்று விடயங்கள் கூறப்ப ட்டிருந்தனஅதிகாரம் அளிக்கப்படாத மற்றும் / அல்லது ஒழுங்கு முறைப்படுத்தப்படாத எந்த ஒரு நிதி நிறுவனத்திலும் உங்கள் பணத்தினை வைப்பில் இடவோ முதலீடு செய்யவோ வேண்டாம்.அதிகாரம் அளிக்கப்பட்ட நிறுவ னமாக இருப்பினும் பொதுமக்கள் அதன் இடர்நேர்வு மற்றும் பலன்களை சீர்துாக்கி பார்க்கவேண்டும். குறிப்பிட்ட வங்கிகள் மற்றும் நிதிக்கம்பனிகள் பட்டியலை வெளியிடுதல் பொதுமக்கள் தமது பணத்தினை மேற்கூறப்பட்ட எந்த ஒரு நிறுவனத்திலாவது வைப்பில் இடுவதையோ முதலீடு செய்வதையோ மத்திய வங்கி சிபார்சு செய்வதாக அர்த்தமாகாது.

சித்தார்த்தன் அதிர்ந்தே விட்டார் !தலை சுற்றியது ! துண்டுப்பிரசுரம் வழங்குவதோ பத்திரிகை வாயிலாக அறிவிப்புக்களை மேற்கொள்வதோ உரிய நேரத்தில் அவசியமானமக்களை சென்றடையு மென்றில்லை. மக்களை சென்றடையும் விதத்தில் எச்சரித்து அவர்கள் மோசம் போய்விடாதபடி தடுப்பதற்கு வேறு வழியுண்டு!ஒரு தனிமனிதனாக இருந்து திருமலையில் பலவர்த்தகர்களையும் நிறுவனங்களையும் குடும்பங்களையும் எந்த வித மனத்தாங்கலும் பாதிப்பும் இல்லாமல் வாழவைத்த சித்தார்தன் தலையில் கைவைத்தபடி அந்த அலுவலக பொது மக்களுடன் பெரும் நிதி கொடுக்கல் வாங்கல்களை செய்த சித்தார்த்தன் இந்த ஏமாற்றைக் கூட புரிந்து கொள்ள மாட்டாரா?

**கலாபூஷணம்**
**வீ.என்.சந்திரகாந்தி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## மௌனகுரு இயக்குனருடன் கார்த்தி



மௌனகுரு சாந்தகுமார் இயக்கத்தில் நடிக்கவிருக்கிறார் கார்த்தி. கார்த்தி நடிப்பில் தீபாவளிக்கு வெளிவந்த அழகுராஜா படம் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை.

இருப்பினும் வெங்கட்பிரபு இயக்கத்தில் அடுத்து வெளிவர இருக்கும் பிரியாணி படத்தை ரொம்பவே நம்பியிருக்கிறார் கார்த்தி.

இப்படத்தைத் தொடர்ந்து தற்போது 'அட்டகத்தி' ரஞ்சித் இயக்கும் பெயரிடப்படாத படத்தில் நடித்து வருகிறார். இந்நிலையில் 2011ம் ஆண்டு வெளிவந்த மௌனகுரு படத்தை இயக்கிய சாந்தகுமார் இயக்கும் புதிய படத்தில் நடிக்க கார்த்தி ஒப்பந்தமாகியிருக்கிறார்.

மௌனகுரு படம் வித்தியாசமான கதையமைப்பால் ரொம்பவும் பேசப்பட்ட படம். இப்படத்தில் அருள்நிதி, இனியா, ஜான் விஜய் உள்ளிட்டோர் நடித்திருந்தனர். இந்நிலையில் கார்த்தி நடிப்பில் முழுக்க முழுக்க மாறுபட்ட கதைகளத்துடன் இந்த படத்தை இயக்கவிருக்கிறார் சாந்தகுமார்.

இப்படத்தை ஸ்டுடியோ க்ரீன் நிறுவனம் தயாரிக்கிறது. இப்படத்தில் கார்த்திக்கு ஜோடியாக நடிப்பவர் யார் என்பது இன்னும் முடிவாகவில்லை மேலும் படத்திற்கு தலைப்பும் வைக்கப்படவில்லை.

## தள்ளிப்போகிறது கோச்சடையான்

ரஜினியின் கோச்சடையான் ரீலிஸ் மீண்டும் தள்ளிப்போகின்றது. கொலிவுட் உலகில் ரசிகர்களின் மிகுந்த எதிர்பார்ப்பில் இருக்கும் திரைப்படம் கோச்சடையான். கேஎஸ்.ரவிக்குமாரின் கதை திரைக்கதை வசனத்தில், சவுந்தர்யாவின் இயக்கத்தில் உருவாகியுள்ள இந்தப் படத்தின் படப்பிடிப்பு முடிந்து கிராபிக்ஸ் மற்றும் அனிமேஷன் பணிகள் நடந்து வருகின்றன.

இந்தப் படத்தின் ஒரு டீசரும், ஒரு பாடலின் ஒலிக் கோப்பும் மட்டும் இதுவரை வெளியாகியுள்ளன. பல முறை படத்தின் வெளியீட்டுத் திகதிஅறிவிக்கப்பட்டு தள்ளிப் போடப்பட்டது. இந்நிலையில் படத்தின் ஓடியோ அக்டோபர் மாதம் வெளியாகும் என்றும் படம் ரஜினி பிறந்த நாளில் வெளியாகும் எனவும் செப்டம்பர் மாதம் அறிவித்தனர்.

ஆனால் அக்டோபர் மாதம் முடிந்த நிலையிலும் படத்தின் இசை வெளியாகவில்லை. எனவே டிசம்பர் 12ம் திகதி இந்தப் படம் வெளியாவது சந்தேகத்திற்கிடமாகியுள்ளது. அநேகமாக ரஜினிக்கு ராசியான ஏப்ரல்14ம் திகதி கோச்சடையான் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஷங்கரின் பாராட்டு மழையில் பாண்டிய நாடு



பாண்டிய நாடு படத்தினை பார்த்து விஷாலுக்கு புகழாரம் சூட்டியுள்ளார் இயக்குனர் ஷங்கர்.

சுசீந்திரன் இயக்கத்தில் விஷாலின் நடிப்பில் வெளியான திரைப்படம் பாண்டிய நாடு. பாரதிராஜா, லட்சுமி மேனன், விக்ராந்த், சூரி என்று நட்சத்திர பட்டாளங்களுடன் தீபாவளி வெளியீடாக களமிறங்கிய இப்படம் திரையரங்கு வரும் ரசிகர்களை பூங்கொத்து கொடுத்து வரவேற்ற வண்ணம் உள்ளது. இந்நிலையில் படம் குறித்து பிரமாண்ட தயாரிப்பாளர் ஷங்கர் தனது சமூக வலைதளத்தில், பாண்டிய நாடு படம் அருமையாக உள்ளது என்றும் அப்படத்தின் உணர்ச்சிபூர்வமான காட்சிகள் மற்றும் ஹீரோவின் நடிப்பு அசத்தலாக உள்ளது எனவும் கூறியுள்ளார்.

மேலும் இயக்குனர் சுசீந்திரன் யதார்த்தமான கதையை மிக அழகாக கொடுத்துள்ளார் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

## கதையே இல்லாமல் படம் எடுக்கும் நடிகர் பார்த்திபன்



இயக்குனரும், நடிகருமான பார்த்திபன் கதையே இல்லாமல் ஒரு படத்தை இயக்க முடிவு செய்துள்ளார். தன்னுடைய படங்களில் தலைப்பை வித்தியாசமாக வைக்கும் பார்த்திபன் இந்த படத்திலும் வித்தியாசமான தலைப்பை தேர்வு செய்துள்ளார். இவர் இயக்கும் புதிய படத்திற்கு 'கதை திரைக்கதை வசனம் இயக்கம்' என பெயர் வைத்துள்ளார். இந்த படத்தின் போஸ்டர்களை 100 ஆண்டு இந்திய சினிமாவுக்கு செலுத்தும் மரியாதை என்ற அறிவிப்போடு வெளியிட்டுள்ளார். இப்படத்தின் தொடக்கவிழா இன்று சென்னையில் உள்ள பிரபல நட்சத்திர ஓட்டலில் நடைபெற்றது. இதில் பார்த்திபன் கலந்து கொண்டு பத்திரிகையாளரிடம் தன்னுடைய புதிய படம் குறித்து விளக்கம் கொடுத்தார். இந்த விழாவுக்கு சிறப்பு விருந்தினர்கள் யாரும் அழைக்கப்படவில்லை. பத்திரிகை நண்பர்களும், ஊடக நண்பர்களும்தான் என்னுடைய சிறப்பு விருந்தினர் என விழா தொடக்கத்திலேயே அனைவரையும் நெகிழ்ச்சியில் ஆழ்த்தினார். விழாவில் நடிகர் பார்த்திபன் பேசும்போது, இப்படத்தில் பெரிய நடிகர், நடிகைகள் எல்லாம் நடிக்கவில்லை. இப்படத்தில் பணிபுரியும் அனைவருமே புதுமுகங்கள்தான். கதையே இல்லாமல் இந்த படத்தை எடுத்திருக்கிறேன். ஒவ்வொரு மனிதனும் நாளை என்ன நடக்கும் என்பதை எதிர்பார்க்காமலேயே தன்னுடைய வாழ்க்கையை வாழ்ந்து வருகிறான். அதுபோல் இந்த படத்திலும் கதாபாத்திரங்களின் ஓட்டத்திலேயே கதை நகரும். தமிழ் சினிமாவுக்கு இது ஒரு புது முயற்சியாக இருக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

இப்படத்தின் அறிமுக பாடலை மதன் கார்க்கி எழுதியுள்ளார். படத்திற்கு மலையாளத்தை சேர்ந்த அல்போன்ஸ் என்பவர் இசையமைக்கிறார். இவர் 'விண்ணைத்தாண்டி வருவாயா' படத்தில் இடம்பெற்ற 'ஆரோமலே' என்ற பாடலை பாடியவர்.

## அழகுராஜா



யாருமே பார்க்காத படு லோக்கலான சேனல் ஒன்றை நடத்தி வருகிறார் கார்த்தி. அவருடைய நண்பனாக வருகிறார் சந்தானம். இருவரும் இந்த சேனலை மக்கள் மத்தியில் எப்படியாவது பிரபலப்படுத்திவிட வேண்டும் என்ற எண்ணத்தில் அதற்கான வேலைகளில் களமிறங்குகின்றனர்.

இந்த வேளையில் மேடையில் பாட்டு பாடி டார்ச்சர் பண்ணும் காஜல் அகர்வாலை பார்த்ததும் அவர்மீது காதல் கொள்கிறார் கார்த்தி. ஆனால், காஜலோ கார்த்தியை வெறுத்து ஒதுக்குகிறார். கார்த்தியின் அப்பா பிரபுவும் காஜல் இந்த காதலுக்கு ஓகே சொன்னாலும் தான் இவர்களுடைய காதலை ஒப்புக்கொள்ளப் போவதில்லை என விடாபிடியாக இருக்கிறார். அதற்கு பிரபு ஒரு காரணமும் கூறுகிறார்.

அந்த காரணம் என்ன? கார்த்தியும், காஜல் அகர்வாலும் இறுதியில் ஒன்று சேர்ந்தார்களா? என்பதை காமெடியுடன் கலகலப்பாக சொல்லியிருக்கிறார்கள். அழகுராஜாவாக வருகிறார் கார்த்தி. பிளாஸ்பேக் காட்சியில் பிரபுவின் 80-கள் கெட்டப்பிலும் நடித்துள்ளார். பிரபுவின் கெட்டப்பில் நடிப்பதற்கு ரொம்பவே சிரமப்பட்டிருக்கிறார். அந்த சிரமம் நடிப்பில் தெரிகிறது. மற்றபடி அழகுராஜாவா ஜொலித்திருக்கிறார்.

சந்தானம் கார்த்திக்கு இணையாக படம் முழுவதும் வலம் வருகிறார். சந்தானம்-ராஜேஷ் கூட்டணியில் அமையும் வசனங்கள் ரசிகர்கள் மத்தியில் பிரபலமாகும். ஆனால், இந்த படத்தில் சந்தானம் பேசும் வசனங்கள் சலிப்பை ஏற்படுத்துகின்றன. கரீனா சோப்ரா என்ற பெண் வேடத்திலும் சந்தானம் நடித்திருக்கிறார். ஆனால், பார்க்க சகிக்கவில்லை.

சித்ரா தேவிப்ரியா என்ற கதாபாத்திரத்தில் மேடை பாடகியாக வருகிறார் காஜல் அகர்வால். மற்ற படங்களைவிட இந்த படத்தில் அழகாக இருக்கிறார். காமெடி கதாபாத்திரத்தில் முதன்முறையாக நடித்திருந்தாலும் காமெடி பண்ணுவதில் முத்திரை பதித்திருக்கிறார். கார்த்தியின் அப்பாவாக பிரபு, அம்மாவாக சரண்யா பொன்வண்ணன், இன்னொரு நாயகியாக வரும் ராதிகா ஆப்தே ஆகியோரும் சிறப்பாக நடித்திருக்கிறார்கள். கோட்டா சீனிவாசராவ், பெண் வேடம் போட்டிருக்கும் சந்தானத்திற்காக அலையோ அலையென அலைவது சிரிக்க வைக்கிறது.

இப்படத்திற்கு தமன் இசையமைத்துள்ளார். இவருடைய இசையில் 'உன்னைப் பார்த்த நேரம்' பாடல் 80-களில் கேட்கும் மெலோடியை நினைவுப்படுத்துகிறது. பின்னணி இசையும் பரவாயில்லை.

தொடர்ந்து காமெடி படங்களையே எடுத்துவந்த ராஜேஷ்தான் இந்த படத்தையும் எடுத்திருக்கிறார். தனது முந்தைய படங்களைவிட இந்த படத்தில் கொஞ்சம் கோட்டை விட்டிருக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும். தொடர்ச்சியாக காட்சிகளை ரசிக்கமுடியாமல் ஆங்காங்கே கொஞ்சம் கடுப்பேத்தியிருக்கிறார்.

மொத்தத்தில் 'அழகுராஜா' பொலிவு இல்லை!

## அஜித்-விஜய் பட வில்லனுடன் மோதும் சூர்யா



சூர்யா-லிங்குசாமி இணைந்திருக்கும் புதிய படம் தொழில்நுட்ப ரீதியிலும், நடிகர்கள் அளவிலும் சிறப்பம்சங்கள் நிறைந்ததாக உருவாகி வருகிறது. இப்படத்திற்கு சந்தோஷ் சிவன் ஒளிப்பதிவு செய்கிறார். இந்திய சினிமாவிலேயே முதன்முறையாக 'ரெட் டிராகன்' என்ற அதிநவீன கேமராவை உபயோகித்து படமாக்குகின்றனர்.

இப்படத்தில் சூர்யாவுக்கு ஜோடியாக சமந்தா நடிக்கப் போவதாக கூறப்படுகிறது. மேலும், இப்படத்தில் வில்லன் கதாபாத்திரத்திற்கு பாலிவுட் நடிகரான மனோஜ் பாஜபாயை தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இவர் இந்தியில் வெளியான 'சத்யா' என்ற திரைப்படத்திற்காக தேசிய விருது பெற்றவர். இப்படத்தில் இவர்தான் முக்கிய வில்லனாம்.

இன்னொரு வில்லனாக அஜித்-விஜய் ஆகியோரின் படங்களில் வில்லனாக நடித்த வித்யூத் ஜம்வால் நடிக்கிறாராம். வித்யூத் ஜம்வால் அஜித்துடன் 'பில்லா-2', விஜய் உடன் 'துப்பாக்கி' ஆகிய படங்களில் வில்லனாக நடித்தவர். தற்போது சூர்யாவுடன் சண்டை போடப் போகிறார்.

பிரகாஷமான இசையமைப்பாளர் அவரது டுவிட்டர் தளத்தில் ரசிகர்களுடன் உரையாடுவது வழக்கமான ஒன்றுதான். அப்படி ஒரு ரசிகர் மத்தவங்களோட ட்யூனை காப்பியடிக்கிறீங்க என்று இவர் மீது குற்றச்சாட்டு கூறியிருக்கிறார். அதற்கு இசையமைப்பாளர் அந்த ரசிகரை கெட்ட வார்த்தைகளால் சகட்டு மேனிக்கு திட்டி தீர்த்துவிட்டாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்றிற்கு மேற்பட்ட புகைப்படங்களின் அளவை ஒரே தடவையில் மாற்றியமைப்பதற்கு

பல புகைப்படங்களின் அளவினை மாற்றியமைப்பதற்கு பல்வேறு மென்பொருட்கள் சந்தைகளில் காணப்படுகின்றன.எனினும் இவற்றில் மிகவும் வினைத்திறன் மிக்க மென்பொருட்களில் ஒன்றாக Ivan Image Converter காணப்படுகின்றது.இந்த மென்பொருளில் 170 இற்கும் மேற்பட்ட கோப்பு வகைகளை உடைய புகைப்படங்களை கையாள முடிவதுடன், 44 வகையான கோப்புக்களுக்கு மாற்றம் செய்துகொள்ளவும் முடியும்.

மேலும் புகைப்படங்களை எடிட் செய்யும் வசதியும், இலகுவான பயனர் இடை முகத்தினையும் இம்மென்பொருள் கொண்டுள்ளது.

## வேகமாக பரவி வரும் புது வைரஸ்! மக்களுக்கு எச்சரிக்கை

இன்றைக்கும் கணனி பயன்படுத்துவோர் சந்திக்கும் மிகப்பெரும் பிரச்சனை எது என்றால் அது வைரஸ் தான்.தற்போதைய நிலையில் பீ போன் என்ற புதிய வைரஸ் ஒன்று மிக வேகமாகப் பரவி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இது ஏறத்தாழ 20 பெயர்களில் கணனி சிஸ்டத்தில் தங்குகிறது.

இந்தியாவில் வைரஸ்களைக் கண்காணிக்கும் Computer Emergency Response TeamIndia (CERTIn) என்ற அமைப்பு இந்த தகவலை வெளியிட்டுள்ளது. இது ட்ரோஜன் வகை வைரஸ் என்றும், பயனாளரிடம் அவருக்கே தெரியாத வகையில், அவரின் அனுமதி பெற்று மற்ற வைரஸ்களையும் கணனியில் பதிக்கும் தன்மை கொண்டதாக இது உலவுகிறது. டிஜிட்டல் பாதுகாப்பு அமைப்பைச் சேர்ந்த வல்லுநர்கள் இந்த வைரஸ் பரவுவதைத் தடுக்க கூடுதல் பாதுகாப்பு வழிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

குறிப்பாக கணனியில் இணைத்து எடுத்து பயன்படுத்தும் ஸ்டோரேஜ் சாதனங்களைப் பயன்படுத்துவதில் அதிகக் கவனம் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர். விண்டோஸ் சிஸ்டத்தில் உள்ள ஆட்டோ ரன் வசதியினை முடக்கி வைப்பது ஒரு பாதுகாப்பு நடவடிக்கையாக இருக்கும்.

விண்டோஸ் சிஸ்டம் கோப்புகளை அவ்வப்போது மேம்படுத்தப்பட வேண்டும். நம்பிக்கைக்கு சந்தேகம் தரும் இணைய தளங்களைப் பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும்.

மிக வலுவான பாஸ்வேர்ட் மற்றும் யூசர் நேம்களைப் பயன்படுத்த வேண்டும் எனவும் இவர்கள் அறிவுரை கூறியுள்ளனர். பீ போன் வைரஸுடன் இணைந்து வோப்பஸ்(Vobfus) என்ற வைரஸும் செயல்படுவதாக குறித்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

## விளையாட்டுப் பையன்

## பளபளவென ஜொலிக்க வேண்டுமா?



அனைவருக்கு பிடித்த ஒன்றான நெல்லிக்காயில் பல்வேறு மருத்துவ குணங்கள் நிறைந்துள்ளன என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் நெல்லிக்காயில் கிடைக்கும் அழகு நன்மைகள் பற்றி பலருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. மென்மையான மற்றும் இளமையான தோற்றத்தைக் கொடுப்பது கொலாஜன் செல்கள் தான்.

ஆனால் வயதாக வயதாக அந்த செல்களின் உற்பத்தி குறைவதால் தான், முதுமைத் தோற்றத்தை அனைவரும் பெறுகிறோம். ஆனால் இந்த கொலாஜன் செல்களின் உற்பத்தியை அதிகரிக்கும் திறன் நெல்லிக்காய்க்கு உள்ளது.

முதுமையை தடுக்கும்

நெல்லிக்காய் சாற்றினை தினமும் காலையில் வெறும் வயிற்றில் தண்ணீருடன் சேர்த்து குடித்து வந்தால், சருமத்தில் உள்ள நச்சுக்கள் வெளியேறி, கொலாஜன் உற்பத்தி அதிகரித்து, சரும சுருக்கம் நீங்கி, இளமையுடன் காட்சியளிக்கும். குறிப்பாக மிருதுவான, பொலிவுடன் கூடிய சருமத்தை பெறலாம்.

கருமை திட்டுக்கள்

ஒருசிலருக்கு சருமத்தில் ஆங்காங்கு கருமையான திட்டுக்கள் காணப்படும். இது வயதான தோற்றத்தைத் தரும். ஆகவே தினமும் நெல்லிக்காய் சாறு பருகி வந்தால், அந்த திட்டுக்கள் மறைந்து, சருமம் பொலிவோடு அழகாக காணப்படும்.

அழகான உடல் வடிவம்

அழகைக் கெடுக்கும் வகையில் உடல் எடை அதிகமாக உள்ளதா? அப்படியானால் தினமும் உடற்பயிற்சி செய்வதுடன், நெல்லிக்காய் சாற்றினையும் பருகி வர வேண்டும். இதனால் உடலின் மெட்டபாலிசம் அதிகரித்து, கொழுப்புக்கள் கரைக்கப்பட்டு, உடல் எடை குறையும்.

ஆரோக்கியமான கூந்தல்

நாள்தோறும் ஒரு டம்ளர் நெல்லிக்காய் சாற்றினை பருகி வந்தால், அது உடலுக்கு மட்டுமின்றி, கூந்தலுக்கும் நல்லது. அதிலும் அதில் உள்ள வைட்டமின் சி சத்தினால், முடியின் வலிமை அதிகரித்து, முடி வெடிப்பு, பொலிவிழந்த காணப்படும் கூந்தல் போன்றவற்றை தடுத்து நிறுத்தி, நல்ல ஆரோக்கியமான கூந்தலைப் பெறலாம். மேலும் நரைமுடி, பொடுகு போன்ற தொல்லைகளுக்கும் சிறந்த நிவாரணத்தை பெறலாம்.

## ஒரு கொலையின் கதை

29 (மாயன்)

அதன்படி வரவேற்புப் பகுதியின் ஒதுக்குப் புறமொன்றில் வரவேற்பாளனும், புலனாய்வாளர்கள் இருவரும் வட்டமாக அமர்ந்து கொண்டு தம் உரையாடலை ஆரம்பித்தனர்.

"நாம் படத்தில் காட்டிய இருவரையும் எவ்வாறு .......

உடனடியாகவே அடையாளம் கண்டு கொண்டீர்கள்? என புலனாய்வாளர் வினவினார்.

சிறிது நேரம் அமைதியாக இருந்த வரவேற்பாளர் அந்த நாளை மெதுவாக நினைவுக்குக் கொண்டுவர முயற்சித்தார்.

அதற்கிடையில் இவர்களிடம் ஒரு கேள்வியைக் கேட்டார் " இவர்கள் இருவரைப் பற்றியும் நீங்கள் ஏன் விசாரிக்கின்றீர்கள் என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா? தெரிந்து கொண்டால் அதற்கு உதவக் கூடிய தகவல்களை நான் தரமுடியும் அல்லவா?" என்றார்..

".ந்த விசாரணையின் இடையிலோ அல்லது முடிவிலோ நீங்கள் உங்களது கேள்விக்கான விடையைப் பெற்றுக் கொண்டு விடுவீர்கள்... அத்துடன் உங்களுக்குத் தெரிந்த விடயங்கள் அனைத்தையும் எமக்குச் சொல்லுங்கள்... அவற்றில் எமக்கு எது தேவையோ அவற்றை நாங்களே சேகரித்துக் கொண்டு எஞ்சியதை விட்டுவிடுவோம்" என பதிலளித்தனர் புலனாய்வாளர்கள்.

"எனக்கு இவர்களை உடனடியாக நினைவுக்குக் கொண்டு வருவதற்கு காரணம் இருக்கின்றது. ஏனென்றால் இவர்கள் இருவரும் ஐந்து நாட்கள் விடுதியில் நின்றபோது விடுதியின் அறைக் கட்டணத்தைச் செலுத்த வேண்டிய கடைசி நாளில் பணத்தைச் செலுத்தாமல் செல்ல முயற்சித்தவர்கள். அதனால் தான் எனக்கு இவர்கள் இருவரையும் நன்றாக நினைவு இருக்கின்றது" என்றார் வரவேற்பாளர்.

"ஏன் அவர்கள் பணத்தைச் செலுத்தவில்லை?"

"கடைசி நாளில் அவர்களிடம் பணம் இல்லை என்றார்கள்.... என்ன செய்வது என்று எங்களிடமே கேட்டார்கள்..... நாங்கள் அவர்கள் இருவரையும் விடுதியை விட்டுப் போக விடுவதாக இல்லை...அவர்கள் கடன் சொல்லிவிட்டுப் போகவே எத்தனித்தார்கள்... அதனால் நாங்கள் அவர்களுடன் வாக்குவாதப்பட வேண்டியிருந்தது... பின்னர் காவல்துறைக்குத் தெரிவிக்க வேண்டிவரும் என்று நாம் கூறினோம்.... அதன் பின்னரே அவர்கள் பணத்தைச் செலுத்துவதாக சம்மதித்தனர்"

"அப்படியா? இவ்வாறு அவர்கள் எப்போது வாக்குவாதப் பட்டார்கள் என்று தெரியுமா?"

"ஒரு நாள்.... மத்தியான நேரம் ...அதாவது அவர்கள் விடுதியை விட்டு வெளியேறுவதற்கு முதல் நாள்..."

"வெளியேறுவதற்க முதல் நாளா?" புலனாய்வாளர்களின் முகத்தில் ஆச்சரிய இரேகைகள் விரவியது...

"நன்றாக ஞாபகப் படுத்திச் சொல்லுங்கள் நண்பரே" என்றார் ஒரு ஆய்வாளர்.

" என்னால் அன்று நடந்தவற்றை முழுவதுமாகச் சொல்ல முடியும்.. ஏனெனில் எனக்கு நன்றாக நினைவு வந்து விட்டது... அவர்கள் விடுதிப் பணத்தைச் செலுத்தாமல் போயிருந்தால் நான் தான் அக் கட்டணத்தைச் செலுத்த வேண்டியிருக்கும் என்ற எண்ணம் என்னுள் சின்னதாய் ஒரு பயத்தையும் கிளப்பியிருந்தது. அதனால் அந்த நாளையும் இவர்கள் இருவரையும் என்னாள் மறக்கவே முடியாது" என்று உறுதியாக அவர் தெரிவித்தார்.

"அப்படியா?... நல்லது... ஏன் அவர்கள் முதல் நாள் மதிய நேரத்தில் அறைகளை விடுவது தொடர்பாகச் பேசினார்கள்?"

" மதிய உணவின் பின்னர் எனது தடுப்பிற்கு வந்த இருவரும் தமது அறைக் கட்டணத்தை மதிப்பிடச் சொன்னார்கள்.. நானும் அவர்களின் கட்டணத்தை மதிப்பிட்டுக் கொடுத்தேன்.. அத்துடன் அவர்களிடம் கேட்டேன் நாளை நீங்கள் எத்தனை மணிக்கு அறைகளை காலி செய்வீர்கள் என்று.... அப்போது அவர்கள் இன்றைய இரவில் எந்த நேரத்திலும் நாங்கள் அறையைக் காலி செய்வோம்... அதனால் தான் உங்களிடம் இப்போதே கட்டண விபரத்தைக் கேட்கின்றோம் எனச் சொன்னார்கள்...."

புலனாய்வாளர்கள் இருவருக்கும் அந்த நாள் எந்தத் திகதியாக இருக்கும் என்பது பொறி தட்டியது...

"அதன் பின் நான் கணிப்பிட்ட தொகையில் சில கழிவுகளை அவர்கள் கோரினார்கள்...ஐந்து நாட்கள் விடுதியில் நின்றதர் முன்னரே தீர்மானிக்கப்பட்டிருந்த அளவிற்குக் கழிவினை வழங்கி இறுதிக் கட்டணத்தை அவர்களுக்குச் சொன்னேன். அதன் பின்னரே அவர்கள் கட்டணத்தைச் செலுத்தாமற் செல்ல முயற்சித்தனர்... இறுதியாக காவல்துறைக்கு அறிவிக்க வேண்டி வரும் என்ற போது அவர்கள் அதற்குக் கடுமையான தமது எதிர்ப்பை



வெளியிட்டார்கள்.. உடனடியாகவே அவர்களில் உயரமாக இருந்தவர் கைத்தொலை பேசியில் எங்கோ கதைத்தார்... அதிகமாக அவரது மனைவியிடம் என்றே நினைக்கின்றேன்.. ஏனெனில் அவரது குரலில் கடுமையான தோரணையும் அதட்டல் தொனியுமே கேட்டது... பின்னர் சிறிது நேரத்தில் பணத்தை கட்டிவிட்டே தாம் விடுதியை விட்டு வெளியேறுவோம் எனக் கூறிக் கொண்டு இருவரும் விடுதியை விட்டு வெளியே நடந்து சென்றார்கள்.

சில மணித்தியாலங்களின் பின்னர் விடுதிக்குத் திரும்பிய அவர்கள் சுமார் ஒன்றரை அல்லது இரண்டடி நீளமான, பொலித்தீன் பையினால் சுற்றிய பொட்டலமொன்றைக் கையில் வைத்திருந்தார்கள்.. அத்துடன் மொத்தப் பணத்தையும் கொடுப்பனவு செய்தார்கள்.... கொடுப்பனவு செய்யும் போது வங்கிச் சிட்டையொன்றையும் அவதானித்தேன்.... அவ் வங்கிச் சிட்டையானது அடையாள அட்டைக்குப் பணத்தைச் செலுத்தும் பரிமாற்றல் சிட்டை என்பதைப் புரிந்து கொண்டேன்... அப்போது மற்றொரு சிட்டையும் அவர்களின் கைகளில் இருந்து தவறி என் மேசையில் விழுந்தது ... அது ஒரு பற்றுச்சீட்டாக இருந்தது... அப்பற்றுச் சீட்டுக்குரிய கடை மத்திய வீதியில் உள்ள கடையொன்றின் பெயரைக் கொண்டிருந்தது... அவர்கள் பணத்தைக் கட்டியவுடன் வேகமாக அறைகளுக்குச் சென்று விட்டார்கள்" என்றார்...

"ஓ..... அப்படியா? அந்தப் பற்றுச் சீட்டில் என்ன எழுதியிருந்தது என்பதைக் கவனித்தீர்களா?"

" இல்லை... நான் அவற்றில் அதிக கவனம் செலுத்தவில்லை"

"பறவாயில்லை... எந்தத் திகதியில் இவ்வாறு........ (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மின்னொளி மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டி



மட்டக்களப்பு புதிய நண்பர்கள் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் நடைபெறும் மின்னொளி மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டியின் ஆரம்ப நிகழ்வு நேற்று இரவு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் ஆரம்ப நிகழ்வில், மட்டக்களப்பு விமானப்படை முகாம் பெறுப்பதிகாரி லெப்ரினன் நிமேஸ் அபேவர்த்தன, மட்டக்களப்பு இராணுவ முகாம் பொறுப்பதிகாரி நிரோசன் வீரக்கொடி ஆகியோர் அதிதிகளாகக் கலந்துகொண்டு போட்டிகளை ஆரம்பித்து வைத்தனர்.

இவ் ஆரம்ப நிகழ்வில், விசேட நிகழ்வாக தீப்பந்தம் சுழற்றி கழக உறுப்பினர் சாகசம் காண்பித்தமை குறிப்பிடத்தக்கதாகும். அணிக்கு ஏழுபேருடையதாகவும், 5 ஓவர்களைக் கொண்டதாகவும் அமையவுள்ள இவ் மின்னொளி மென்பந்துக்கிரிக்கட் சுற்றுப் போட்டி எதிர்வரும் 6ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இரவு 7 மணிமுதல் அதிகாலை 2 மணிவரையில், முன்பதிவு அடிப்படையில் 40 அணிகள் இச்சுற்றுப் போட்டியில் மோதவுள்ளன. நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு நாள் ஒன்றுக்கு ஒரு குழுக்கள் வீதம் நொக்கவுட் முறையில் சுற்றுப்போட்டிகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வெற்றி அணிகள் நான்கு தெரிவு செய்யப்படுவதுடன், இறுதிப்போட்டியின் ஆட்ட நாயகன், தொடராட்ட நாயகன், சிறந்த பந்து வீச்சாளர், சிறந்த களத்தடுப்பாளர், சுப்பர் 8 போட்டி ஆட்ட நாயகன் ஆகிய பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. தெரிவு செய்யப்படும் நான்கு அணிகளுக்கு முறையே 10ஆயிரம், 7500, 5000, 2500 வீதம் பணப்பரிசில்களும், வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்படவுள்ளன.

## அங்கத்துவ கழகங்களுக்கு உபகரணங்கள்



திருகோணமலை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தால் அங்கத்துவ கழகங்களுக்கு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு தலா 10,000 ஷரூபாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான அனுமதிக் கடிதம் நேற்று ஏகாம்பரம் விளையாடடு மைதானத்தில் வைத்து வழங்கப்ப்டுள்ளது.

## சாதனை படைத்தார் சங்கக்காரா!



இந்த வருடத்தில் குறைந்த ஒருநாள் சர்வதேச போட்டிகளின் மூலம் 1000 ஓட்டங்களை விரைவாக பெற்ற பெருமையை இலங்கையின் வீரர் குமார் சங்கக்கார பெற்றுள்ளார். இதன்படி 19 போட்டிகளில் அவர் இந்த 1000 ஓட்டங்களை பெற்றுள்ளார். நியூசிலாந்து இலங்கை அணிகளுக்கிடையலான இரண்டாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி, ஹம்பாந்தோட்ட சூரியவெவ மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இந்தப் போட்டியில் விளையாடிய சங்கக்கார ஆட்டமிழக்காமல் 71 ஓட்டங்களை எடுத்தார்.மேலும் தற்சமயம் விளையாடிவரும் வீரர்களுள் 2013ல் அதி கூடிய ஓட்ட சராசரி வீதத்தையும் அவரே கொண்டுள்ளார். அவரது ஓட்ட சராசரி வீதமானது 79.46. இவ்வருடத்தின் அதி கூடிய ஓட்டங்களான 1133 இனை பாக்கிஸ்தான் வீரர் மிஸ்பா உல் ஹக் தக்கவைத்துள்ளார். மேலும் அந்த இலக்கை அடைய சங்காவுக்கு மேலும் 86 ஓட்டங்கள் மாத்திரமே தேவைப்படுகிறது. மே[illegible], சங்கா 7 போட்டிகள் குறைவாக விளையாடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானைத் தோற்கடித்தது தென்னாபிரிக்கா



ஐக்கிய அரபு இராச்சியத்திற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், பாகிஸ்தான் அணிக்குமிடையிலான 2 போட்டிகள் கொண்ட டுவெண்டி டுவெண்டி சர்வதேசப் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் தென்னாபிரிக்க அணி இலகுவான வெற்றியைப் பெற்றுள்ளது.

டுபாய் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் தடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 98 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. ஆரம்பத்திலிருந்தே விக்கெட்டுக்களை இழந்த அவ்வணி, 3 விக்கெட்டுக்களை இழந்து 4 ஓட்டங்களுடனும், 5 விக்கெட்டுக்களை இழந்து 41 ஓட்டங்களுடனும் தடுமாற்றத்தை வெளிப்படுத்தியிருந்தது. உமர் அக்மல் மாத்திரம் சிறப்பாக ஆடியிருந்தார்.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக உமர் அக்மல் 41 பந்துகளில் 49 ஓட்டங்களைப் பெற்றார். ஷகிட் அப்ரிடி, சொய்ப் மலிக், அப்துல் ரஸாக் மூவரும் முறையே 10, 12, 10 ஓட்டங்களைப் பெற்றதோடு, வேறு எந்த வீரரும் இரட்டைப்படை ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ளவில்லை. பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக டேல் ஸ்ரெய்ன் 15 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், லொன்வபோ சொற்சொபி 9 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், இம்ரான் தாஹிர் 17 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், றயன் மக்லரன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

99 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 14.3 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. முதலாவது விக்கெட்டை 16 ஓட்டங்களுக்கே அவ்வணி இழந்த போதிலும், இரண்டாவது விக்கெட்டுக்காக பிரிக்கப்படாத 83 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்தன. துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக குயின்டன் டீ கொக் 38 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 48 ஓட்டங்களையும், ப.்.ப் டு பிளெஸிஸ் 40 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 37 ஓட்டங்களையும் பெற்றனர். பாகிஸ்தான் அணி சார்பாக வீழ்த்தப்பட்ட விக்கெட்டை சொஹைல் தன்வீர வீழ்த்தினார். இப்போட்டியின் நாயகனாக தென்னாபிரிக்க அணியின் டேல் ஸ்ரெய்ன் தெரிவானார்.

## கிரிக்கெட் பயிற்சி ஆடுகளங்கள் திறப்பு



திருக்கோணமலை நகராட்சி மன்றத்தின் ஏகாம்பரம் மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு கிரிக்கெட் பயிற்சி ஆடுகளங்கள் செவ்வாய்க்கிழமை நகராட்சிமன்றத்தின் தலைவர் க.செல்வராஜாவினால் (சுப்ரா) திறந்து வைக்கக்பட்டது

இந்நிகழ்வு திருகோணமலை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

## 12 கோடி ரூபாய் பரிசுத் தொகையை தட்டிச் சென்றார் ஜோகோவிக்



ஏடிபி உலக டூர் போட்டியின் இறுதிச் சுற்றில் நடாலை வீழ்த்து சாம்பியன் பட்டம் வென்றார் ஜோகோவிக்.

உலக தரவரிசையில் முதல் 8 இடத்தில் உள்ள வீரர்கள் பங்கேற்ற ஏடிபி உலக டூர் பைனல்ஸ் போட்டி லண்டனில் நடந்தது.

இதன் இறுதி போட்டியில் நேற்று நம்பர் ஒன் வீரரான ஸ்பெயினின் நடால், 2ம் நிலை வீரரான செர்பியாவின் ஜோகோவிக்கை எதிர்த்து ஆடினார். ரசிகர்கள் மத்தியில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்திய இந்த ஆட்டத்தில் ஜோகோவிக் 6- 3, 6- 4 என்ற நேர்செட்டில் நடாலை தோற்கடித்து சாம்பியன் பட்டம் வென்றார்.

இந்த ஆட்டம் 1 மணி நேரம் 36 நிமிடங்கள் நடந்தது. சாம்பியன் கோப்பையுடன் ஜோகோவிற்கு ஷரூ.12 கோடி பரிசுத்தொகை வழங்கப்பட்டது.

2வது இடம் பிடித்த நடால் ஷரூ.6.38 கோடி பரிசுத்தொகை பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்கத் தடையில் எரிபொருள் செலவு உயர்ந்தது.

ஈரானிடம் இருந்து 3ம் நபருடாக எரிபொருள் இறக்குமதி செய்யப்பட்டதை கடுமையாக அமெரிக்கா எதிர்த்ததுடன் எச்சரிக்கையும் இலங்கைக்கு வழங்கியிருந்தது. அவ் எச்சிரிக்கையால் இலங்கை சிங்கப்பூரிடம் இருந்து பெற்றோலியக் கொள்வனவை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. இதனால் பெற்றோலியச் செலவு கடுமையாக அதிகரிக்கும் போல உள்ளது.

## செயற்கைக் கடற்கரைகளால்உல்லாசப் பயணிகளைக்கவரத்திட்டம்

காலி முகத்திடலில் இரண்டு கிலோமீற்றர் நீளமான செயற்கைக் கடற்கரையை நிர்மாணித்து அதன் ஊடாக உல்லாசப் பயணிகளை கவர்ந்திருக்க அரசு திட்டமிடுகின்றது.

**the SUNDAY TIMES**

## பிரதமரின் அலுவலக்க கடிதம் கோரிய வரி விடுதலை கொள்கலனில் ஹெரோயின்

பாகிஸ்தானில் இருந்து கடத்திவரப்பட்ட சுமார் 250 கிலோகிராம் நிறை கொண்ட ஹெரோயின் கொள்கலன் ஒன்றின் ஊடாகவே கடத்தப் பட்டுள்ளது. இக் கொள்கலனிற்கு இலங்கையின் பிரதமர் அலுவலகம் எவ்வாறு வரிவிடு தலையைக் கோரியது என்பது பற்றிய விசாரணைகள் முடுக்கப்பட்டுள்ளன.

## நில அகழ்விற்கு சட்டவிரோத அனுமதிப் பத்திரம்?

கனிய மட்டும் இரத்தினக்கற்கள் அகழ்விற்காக அமைச்சினால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்கள் சட்டவிரோதமாக வழங்கப்பட்டுள்ளதா என்பதை அறியுமாறு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## தென்கொரிய வேலைவாய்ப்பை இழந்தது இலங்கை

தென்கொரியாவினால் இலங்கைக் கடற்தொழிலாளர்களுக்கு வழங்கப் படவிருந்த 50 தொழில் வாய்ப்புக்கள் இழக்கப்பட்டுள்ளன. இலங்கை வெளிநாட்டு தொழில் வாய்ப்புப் பணியகம் தொழில் ஒப்பந்தங்களை நிரப்புவதை தடைசெய்யப்பட்டமையே இதற்கான காரணம் ஆகும்.

ட்லோலர் படகுகளில் வேலை செய்ய வழங்கப்பட்ட வேலை வாய்ப்புக்களே அவை என மீன்பிடி அமைச்சு தெரிவித்துள்ளது. நேரடியாக மீன்பிடி அமைச்சிற்கு இவ் வேலை வாய்ப்புக்கள் வழங்கப்பட்டதாலேயே வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் முரண்படுவதாகவும் தெரிகின்றது.

## நட்டத்தில் இயங்கும் தபால் திணைக்களம் சொகுசு பங்களாவில் மில்லியன் முதலீடு

கடந்த வருடம் 3.3 மில்லியன் நட்டத்தை எதிர்கொண்டுள்ள தபால் திணைக்களம் இவ்வருடம் 300 பில்லியன் ரூபாய்களை சொகுசு பங்களவில் செலவிட உள்ளது.

நுவரெலியா மற்றும் ஏனைய முக்கிய நகரங்களில் சொகுசு பங்களாக்களை நிர்மானிப்பதற்காக தபால் திணைக்களம் "தயத்த ஹிருள்ள" கண்காட்சிக்காக தபால் திணைக்களம் 2.6 பில்லியன் ரூபாய்களை செலவிட்டமையும்.



**SUNDAY OBSERVER**

Sri Lanka's English Newspaper with the largest circulation

## பங்கு பற்றுவோரைக் கவரத் திட்டம்

பொதுநலவாய மக்கள் கூட்டத் தொடரில் பெருமளவு பங்கிலார் கலந்து கொள்ளவுள்ளதாக பிரதிச் சபாநாயகர் தெரிவித்துள்ளார். இக் கூட்டத்தொடரில் 268 வெளிநாட்டு நிறுவனங்களும், 190 உள்ளூர் நிறுவனங்களும் கலந்து கொள்ளவு ள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

## பொதுநலவாயத் தொடரின் வெற்றிக்கு அரசு முழு முயற்சியுடன்இறங்கியுள்ளது

பொதுநலவாயக் கூட்டத் தொடரின் வெற்றிக்காக இலங்கை அரசு கடும் பிரயத்தனங்களை மேற்கொள்வதாக கெகலியரம்புக்கெல்ல தெரிவித்துள்ளார். அத்துடன் சர்வதேசத்திற்கு ஊடகத் தகவல்களை வழங்குவதற்காக கெகலிய ரம்புக்வெல்லவின் கீழ் இயங்கும் அமைச்சானது 24 மணிநேரமும் சுழற்சி முறையில் வேலை செய்வதாக அமைச்சர் மேலும்

## புகைத்தலற்ற பிரதேசங்கள் உருவாகவுள்ளன.

நாட்டில் உள்ள முக்கியமான நகரங்களில் இருக்கின்ற ஒவ்வொரு பொது வைத்தி அதிகாரிப் பிரிவுகளிலும் புகைத்தலற்ற வலயங்கள் உருவாக்க ப்பட்ட இருப்பதாக ஐக்கிய இலங்கைப் பொது சுகாதாரப் பரிசோதகர் சங்கம் தெரிவித் துள்ளது. இலங்கையில் பல பிரதேங்களிலும் பரவலாகக் காணப்படும் புகைத்தல் பழக்கத்தைக் கருத்திற் கொண்டே 38 வைத்திய அதிகாரிப் பிரதேசங்களில் இப் புகைத்தல் தடுக்கப் பட்ட வலயங்கள் முதற்கட்டமாக உருவாக்கப்படவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## நகர உணவகங்களின் மீது எக்ஸ் கதிர் பார்வை

பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு கொழும்பு நகர உணவகங்களின் மீது கடும் கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. விரைவுக் கூரியர் தபால் சேவை.

இலங்கையின் முழுவதும் அறிமுகம் செய்துள்ளது. மத்திய தந்திப் பரிவர்த்தனை நிலையத்தில் இருந்த இவ் அதிவேக கூரியர் சேவை நடாத்தப் படவுள்ளது.

## துறைமுக அதிகார சபை சாதனை

நாலொன்றில் அதிகூடிய கொல்கலன் கையாள்கையை மேற்கொண்டு இலங்கை துறைமுக அதிகாரசபை சாதணையடைந்துள்ளது. கடந்த நவம்பர் 2ம் திகதி 9884 கொள்கன்களை துறைமுக அதிகாரசபை கையாண்டு ள்ளதே நாலொன்றில் கையாளப்பட்ட அதி கூடிய கொள்கலன்களாக துறைமுக அதிகார சபையின் வரலாற்றில் பதிவாகியுள்ளது. இதற்கு முன் 24 ஜுன் 2013ல் 9659 கொள்கலன்கள் கையாளப்பட்டதே சாதணையாகப் பதிவாகி இருந்தது.

## உலகில் உயர்ந்த வீட்டுத் திட்ட பூங்கா கொழும்பில்

கொழும்பில் கோட்டையில் 6 பில்லியன் ரூபா செலவில் நிர்மானிக்கபடவுள்ள வீட்டுக்கட்டிடத் தொகுதியே உலகின் உயர்ந்த வீட்டுத்திட்ட பூங்காவையும் கொண்டமைய உள்ளது.

46 மாடிக் கட்டிடமாக அமைய வுள்ள இவ் வீட்டுத் தொகுதியில் 164 மூன்று படுக்கையறை மனைகளுள் அமைக்கப்படவுள்ளன. அவை 2300 சதுர அடி பரப்பளவைக் கொண்ட மையும்

2016ம் ஆண்டில் தன்னிச்சை யாக நீர் வழங்கல் வசதியைப் பெற்றுக் கொள்ளுமாறு வீட்டுத்திட்டப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.



## பொதுநலவாயப் பெறுமதிகளைப் பேண இலங்கையைவலியுறுத்தப்படும்

பிரித்தானியப் பிரதமர் இலங்கைக்கு வருகைதரும் போது பொதுநலவாயப் பெறுமதிகளை இலங்கை பேண வேண்டும் என்பதை வலியுறுத்தப்படும் என பிரித்தானிய தூதுவராலயம் தெரிவித்துள்ளது.

## புதிய ஒழுங்குவிதிகள் தொடர்பாக வைத்தியர் களுக்குத் தெரியாது

வைத்தியர்களின் வாகனங்களில் அடையாளச் சின்னம் ஒட்டுவது தொடர்பாக அரசினால் விடுக்கப்பட்டுள்ள புதிய ஒழுங்கு விதிகள் தொடர்பாக தமக்குத் தெரியாது என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

கண்ணாடிகளில் "வைத்தியர்" அடையாளத்தை ஒட்டுவது புதிய ஒழுங்கு விதிகளின் கீழ் தடை செய்யப்பட்டுள்ளது. எனினும் அவசர நிலைமைகளை கருத்திற் கொண்டே வைத்திய அடையாளத்தை

**The Sunday LEADER**

வாகனங்களில் ஒட்ட வேண்டியுள்ளது என அரச வைத்தியர் சங்க தலைவர் தெரிவித்துள்ளார்.

## சந்திரிகாவுடன் ஐ.தே.க உறுப்பினர்கள்ஆலோசணை

முன்னால் சனாதிபதி சந்திரிக்கா அம்மையாருடன் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் இரகசியக் கூட்டமொன்றை நடாத்தியுள்ளனர். சுமார் 6 பாராளுமன்ற உறுப்பினர்கள் நான்கு மணி நேரமாகப் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகின்றது. அடுத்த தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பாகவே இக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

## புதிய ஆயுர்வேதச் சட்டத்தை அட்டோனி ஜெனரல் தடுத்துள்ளார்.

புதிய ஆயுர்வேதச் சட்டத்தை சட்ட ஆய்விற்காகச் சமர்ப்பித்தபோது அச் சட்டத்ததை அட்டோனி ஜெனரல் நிராகரித்து விட்டதாக ஆயுர்வேதப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

புதிய சட்டமானது ஆயுர்வேத மருத்துவச் சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை முன்மொழிந்திருந்தது.

## ஊடகவியலாளர் பாதுகாக்குமாறு பொது நலவாயத்திடம் கோரிக்கை

இலங்கையிலுள்ள ஊடகவியலாளர் களின் பாதுகாப்பை உறுதிப் படுத்துமாறு பொதுநலவாயத் தலைவல்களை, ஊடகவியலாளரைப் பாதுகாக்கும் அமைப்பு கோரியுள்ளது.

சுமார் 50 நாட்டுத் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ள பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடைபெறும் இச் சந்தர்ப்பத்தில் தான் இலங்கையின் ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும்படி கோருதல் பொருத்தமானதாக இருக்கும் என அவ்வமைப்பு அறிக்கையிட்டுள்ளது.

## நாம் அனுப்பிய செய்தி தெளிவானது

இலங்கைக்குத் தெளிவான செய்தி யொன்றையே நாம் அனுப்பியுள்ளோம். அதன்படி ''மனித உரிமைகள் தொடர்பாக இலங்கைமீது நாம் கொண்டுள்ள நிலைப்பாடானது இலங்கையின் நடவடிக்கைகளால் மாற்றமடையக் கூடியது" என கனெடிய வெளியுறவுத் துறை உலகின் மனித உரிமைகளுக்காக கனடா எப்போதுமே போராடும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## கிரிஸ் நிறுவனம், ஊடாக அறிக்கைகள் தொடர்பாக நடவடிக்கைகளை எடுக்கக் கோருகின்றது.

பாரிய வீட்டுத்திட்டமொன்றை கொழும்பில் உருவாக்க முனைந்துள்ள இந்தியக் கம்பனியான "கிரிஸ்"கம்பனி தொடர்பாக ஊடகங்களின் பாதகமாக ஊடாக எழுதப்பட்டுள்ள கருத்துக்க ளுக்கு எதிராக நடவடிக்கைகளை அரசே மேற்கொள்ள வேண்டும் என கிரிஸ் கம்பனியின் உள்நாட்டு முகவராமைப்பு தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கல்விமுரசு

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான

## பரீட்சை வழிகாட்டல்

### பாடம் - விஞ்ஞானம், 10

1. குருதியில் இருக்கும் பின்வரும் சிறுதுணிக்கை வகைகளுக்கிடையே கருவைக் கொண்டிராத சிறுதுணிக்கை வகை யாது?
   1. ஒற்றைக் குழியங்கள் 2. நிணநீர்க் குழியங்கள்
   3. சிறு தட்டுக்கள் 4. இயோசினாடிகள்
2. அமிழ்ந்த இலைவாய்கள் உள்ள இலைகள் எந்தச் சூழலில் வாழ்வதற்கு இசைவாக்கமடைந்த தாவரங்களில் இருக்கும்?
   1. நீரினுள்ளே அமிழ்ந்திருப்பதற்கு
   2. நீரின் மீது மிதந்து கொண்டு இருப்பதற்கு
   3. உலர்ந்த காலநிலை இருக்கும் பிரதேசங்களில் வளர்வதற்கு
   4. நல்ல ஈரலிப்பு உள்ள பிரதேசங்களில் வளர்வதற்கு
3. மனித உடலில் சமநிலையைப் பேணுவதற்குப் பின்வருவனவற்றில் எது உதவுகின்றது?
   1. நத்தைச்சுருள் 2. செவிச்சிற்றென்புகள்
   3. செவிப்பறை மென்சவ்வு 4. தலைவாயில் உபகரணம்
4. திரவம் ஒன்றினுள்ளே இருக்கும் புள்ளி ஒன்றில் உள்ள அமுக்கத்திற் வெல்வாக்குச் செலுத்தாத காரணி எது?
   1. திரவத்தின் அடர்த்தி 2. திரவத்தின் கனவளவு
   3. ஈவையினாலான ஆர்முடுகல்
   4. சுயாதீன மேற்பரப்பில் இருந்து அப்புள்ளியின் ஆழம்
5. மனிதர்களிடையே காணப்படும் பரம்பரை நோயாக அமையாதது எது?
   1. கழலை 2. குருதியுறையா நோய் 3. நிறக்குருடு
   4. அரிவாட் கலக் குருதிச்சோகை
6. இயக்கு நரம்பின் தொழில்
   1. தெறிப்பு வில்லில் மாத்திரம் பங்குபற்றல்
   2. மூளையிலிருந்து முண்ணானுக்கு மாத்திரம் கணத்தாக்கங்களைக் கொண்டு செல்லல்
   3. மைய நரம்புத் தொகுதியிலிருந்து தசைகளுக்குக் கணத்தாக்கங்களைக் கொண்டு செல்லல்
   4. புலனங்கங்களிலிருந்து மைய நரம்புத் தொகுதிக்குக் கணத்தாக்கங்களைக் கொண்டு செல்லல்
7. பயிரிடும் பணிகளில் பல்வேறு தொழில்களுக்காக தாவர ஓமோன்களைப் பயனுறுதி வாய்ந்த விதத்தில் பிரயோகிக்கலாம். எனினும் தாவர ஓமோன்கள் நிறைவேற்ற முடியாத ஒரு தொழில்
   1. சிறு கிளையை வேர்விடச் செய்தல்
   2. களைகொள்ளியாகச் செயற்படச் செய்தல்
   3. பருவமல்லாத போது பூக்களும் காய்களும் உண்டாகச் செய்தல்.
   4. பீடைகொல்லியாகச் செயற்படச் செய்தல்
8. இரண்டு நரம்புக் கலங்கள் சந்திக்கும் இடம் எவ்வாறு அழைக்கப்படும்?
   1. இரன்வியரின் கணு 2. நரம்பு நாருறை
   3. நரம்பிணைப்பு 4. உட்காவு நரம்பு முனை
9. வன்கூட்டுத்தசையின் இயல்புகளைப் பின்வரும் எந்த விடை சரியாகக் குறிப்பிடுகின்றது?
   1. வரிகள் உள்ளது, இச்சைவழி இயங்குகின்றது.
   2. வரிகள் உள்ளது, இச்சைவழி இயங்காதது.
   3. வரிகள் இல்லாதது, இச்சைவழி இயங்குகின்றது.
   4. வரிகள் இல்லாதது, இச்சைவழி இயங்காதது
10. $A$, $B$ எனப் பெயரிடப்பட்ட இரு ஒத்த முகவைகளிலே ஒரே வெப்பநிலையில் நீரின் சம கனவளவுகள் இருக்கின்றன. $70^{\circ}c$ இற்கு வெப்பமாக்கப்பட்ட $500g$ திணிவுள்ள ஓர் இரும்புத் தராசுப்படியும் அதே வெப்பநிலைக்கு வெப்பமாக்கப்பட்ட $10g$ திணிவுள்ள ஓர் இரும்பு ஆணியும் முறையே $A$, $B$ ஆகியவற்றின் உள்ளே ஒரே கணத்தில் இடப்பட்டு, ஒத்த நிலைமைகளில் இருக்கவிடப்பட்டன. ஒரு நிமிடத்திற்குப் பின்னர் முகவையில் இருக்கும் நீரின் வெப்பநிலை பற்றிய சரியான கூற்று பின்வருவனவற்றில் யாது?
    1. $A$ யின் வெப்பநிலை $B$ யின் வெப்பநிலையிலும் கூடியது.
    2. $A$ யின் வெப்பநிலை $B$ யிற்கு சமன்
    3. $A$ யின் வெப்பநிலை $B$ யின் வெப்பநிலையிலும் குறைந்தது.
    4. $A$, $B$ ஆகியவற்றின் வெப்பநிலைகளை எதிர்வு கூற முடியாது.
11. பின்வரும் எந்த அங்கிகள் அழுகல் தாவரம் எனப்படும்?
    1. தமது உணவை தாமே உற்பத்தி செய்யும் அங்கிகள்
    2. வேறு அங்கிகளை உணவாகக் கொள்ளும் அங்கிகள்
    3. இறந்த விலங்குப் பகுதிகளையும், தாவரப் பகுதிகளையும் சார்ந்திருக்கும் அங்கிகள்
    4. பச்சைத் தாவரங்களை மாத்திரம் உணவாகக் கொள்ளும் அங்கிகள்
12. பிரிமென்றகடு என்பது வயிற்றுக் குழியில் இருந்து நெஞ்சறைக் குழியை வேறுபடுத்தும் தசை சுவராகும். இதன் பிரதானமான தொழில் யாது?
    1. நெஞ்சறையில் உள்ள அங்கங்களும், வயிற்றில் உள்ள அங்கங்களும் தொடுகையுறுவதைத் தடுத்தல்
    2. உட்சுவாசத்திற்கும், வெளிச்சுவாசத்திற்கும் உதவுதல்
    3. வயிறு வெளியே தள்ளப்படுருப்பதைத் தடுத்தல்
    4. நுரையீரல்கள், இதயம் போன்ற அங்கங்களை தாங்கியிருத்தல்

விஞ்ஞான பரீட்சை வழிகாட்டல் ஆசிரியர்
குரு கல்வி நிலையம், சாம்பல் தீவு, புல்மோட்டை



### பாடம் - கணிதம், 10

01) a) i) $y = (x-3)(x+b)$ எனும் வரைபானது $(1, -4)$ இல் திரும்பல் புள்ளியைக் கொண்டது. b இன்பெறுமானத்தைக் காண்க.

ii) கீழே தரப்பட்ட அட்டவணையின் வெற்றிடங்களை நிரப்புக.

| X | −2 | −1 | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|
| Y | … | … | −3 | … | … | 0 | 5 |

iii) x , y அச்சுக்களின் வழியே 10 சிறு பிரிவுகளை ஓரலகாக கொண்டு பொருத்தமான வரைபை வரைக.

b) உமது வரைபிலிருந்து ,

(i) x அச்சை வெட்டும் புள்ளியின் ஆள்கூற்றைத் தருக.

(ii) சமச்சீர் அச்சின் சமன்பாட்டைத் தருக.

(iii) $y = (x-5)(x+1)$ எனும் வரைபின் சமச்சீர் அச்சு இ திரும்பல் புள்ளி என்பவற்றை உய்த்தறிக.

c) $(x-3)(x+b) = x+1$ என்பதன் மூலகங்களை காண்க.

02) கவராயம் நேர்விளிம்பு cm /mm அளவுச்சட்டம் ஆகியவற்றை பயன்படுத்தி

i) AB = 6 cm , AD = 9cm , BD = 5.5cm ஆகிய அளவுகளைக் கொண்டு இணைகரம் ABCD ஐ அமைக்க.

ii) BC இன் நீளத்தை அளந்து எழுதுக.

iii) AC என்பதை புள்ளி A இல் தொட்டு B இற்கூடாக செல்லும் வட்டம் வரைக.

iv) வட்டத்தின் ஆரையை அளந்து எழுதுக.

03) தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றின் விற்பனை விலை ரூ 24000 ஆகும். உடன் காசுக்கு வாங்கும் போது 5% கழிவு கொடுக்கப்படுகின்றது. வாடகை கொள்வனவு முறையில் வாங்கும் போது முதலில் ரூபா 16000 செலுத்தி மீதியை சம மாதாந்தக் கட்டணங்களாக 6 மாதங்களில் செலுத்த வேண்டும். அறவிடப்படும் மாத வட்டி வீதம் 1.5% ஆகும்.

i) உடன் காசுக்கு வாங்கும் போது செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு?

ii) வாடகை கொள்வனவு முறையில் செலுத்தப்படுமாயின் ஒரு தவணைக் கட்டணம் எவ்வளவு?

iii)வாடகை கொள்வனவு முறையில் வாங்கிய ஒருவர் உடன் காசுக்கு வாங்கி இருந்தால் எவ்வளவுபணத்தைச் சேமித்திருப்பார்?

04) இரு சதுரமுகிகளின் விளிம்புகளின் நீளங்களுக்கிடையே உள்ள விகிதம் 5:3 ஆகும். இரு சதுரமுகிகளினதும் கனவளவுகளின் கூட்டுத்தொகை $760cm^3$ ஆகும்.

i) இரு சதுரமுகிகளினதும் கனவளவுகளுக்கிடையே உள்ள விகிதத்தைக் காண்க.

ii) கனவளவுகளின் கூட்டுத்தொகையை ஒரு சமன்பாட்டில் காட்டுக.

iii)சிறிய சதுரமுகியின் கனவளவு எத்தனை கனசென்ரி மீற்றர் ஆகும்.

iv) $x^3 = 5$ எனின் மடக்கையை பயன்படுத்தி x இன் பெறுமானத்தைக் கண்டு முதலாம் தசமதானத்திற்குமட்டம் தட்டுக.

v) சிறிய சதுரமுகியினது விளிம்பு ஒன்றின் நீளத்தைக் கிட்டிய mm இல் தருக.

05) ஒரு போட்டியில் 5 மாணவர்களும் 3 மாணவிகளுமாக மொத்தம் 8 பேர் பங்குபற்றினர். இதில் முதல் இரண்டு இடங்கள் தெரிவு செய்யப்பட்டது.

i) இதற்கான புள்ளி வரைபை வரைக.

ii) பின்வருவனவற்றின் நிகழ்தகவுகளைக் காண்க.

a) இருவரும் மாணவர்களாக இருத்தல்

b)ஒருவர் மாணவனாகவும் மற்றவர் மாணவியாகவும் இருத்தல்

c)ஒருவரேனும் மாணவியாக இருத்தல்.

06) a) கூட்டல் விருத்தியொன்றில் முதல் 15 உறுப்புக்களினதும் கூட்டுத்தொகை -255 ஆகும். கடைசி உறுப்பு - 45 ஆகும் பின்வருவனவற்றைக் காண்க.

i) முதல் உறுப்பு, ii) பொது வித்தியாசம், iii) 10ம் உறுப்பு

b) ஒரு பெருக்கல் விருத்தியின் இரண்டாம் உறுப்பினதும் மூன்றாம் உறுப்பினதும் கூட்டுத்தொகை 3 ஆகும். இப் பெருக்கல் விருத்தியின் நான்காம் உறுப்பின் 8 மடங்கு அதன் எழாம் உறுப்பிற்கு சமனாகும்.

i) முதலாம் உறுப்பு

ii) பொது விகிதம்

iii)இப் பெருக்கல் விருத்தியின் இருபத்தேழாம் உறுப்பை இரண்டின் வலுவில்

கணிதம் வழிகாட்டல் -
திருமலையின் பிரபல ஆசிரியர் T.குமணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

பயிற்சி 11 பாடம் - வரலாறு

பகுதி 02.

01. சீனா உலக வல்லரசாக மாறுவதற்கு பங்களிப்பு செய்தது அங்கு பல கட்டங்களில் நடந்த புரட்சிகளாகும்

அ. 1. சீனப் புரட்சியின் தந்தை என வர்ணிக்கப்படுபவர்
2. நவீன பொதுவுடமை சீனாவின் சிற்பி என வர்ணிக்கப்படுபவர்
3. தண்டனை வழங்கும் செயற்பாடு மூலம் படைத்தலைவர்களின் அதிகாரத்தை ஒழித்த இராணுவ தளபதி

ஆ. சீனாவின் வளர்ச்சிக்கு கோமிங்டாங் கட்சியால் ஆற்றப்பட்ட பணிகள் நான்கை தருக?

இ. சீனாவில் கொமியூனிஸ வாதத்தை வளர்க்க மாவோ சேதுங் முன்னெடுத்த இரு நடவடிக்கைகளை விவரிக்குக.

ஈ. சீனாவில் கொமியூனிஸ ஆட்சியால் ஏற்பட்ட விளைவுகள் மூன்றை சுருக்குமாக விவரிக்குக.

02. இங்கிலாந்தில் தோன்றிய கைத்தொழில் புரட்சி ஐரோப்பியாவில் மட்டுமின்றி உலகில் பல நாடுகளுக்கு பரவி கைத்தொழில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது

1- இங்கிலாந்தில் கைத் தொழில் புரட்சி ஏற்படுத்திய மூன்று துறைகளும் எவை?

2- பின்வரும் கண்டு பிடிப்பாளர்களின் கண்டு பிடிப்புக்களை அடைப்புக்குள் இருந்து தெரிந்து எழுதுக.
*(தொலைக்காட்சி, தொலைநோக்கி, தார்வீதி அமைக்கும் முறை, தொலைபன்னி, வானொலி, பாதுகாப்பு விளக்கு, தந்திச்சேவை. கைபோக்கிக்கப்பல்)*
1. ஜோன் லொகி பெயார்ட் 2. ஜோன் மெக்கடம்
3. கிரஹம் பெல் 4. மார்க்கோனி

3- இங்கிலாந்தில் தொழிற் புரட்சி ஏற்படுத்துவதில் பங்களித்த காரணிகள் இரண்டை தருக?

4- கைத்தொழிற் புரட்சியில் ஏற்பட்ட நன்மை, தீமைகள் மூன்றை காரணிகள் ஊடாக விளக்குக.

பகுதி 01

01. டில்லிசுல்தான் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்த பிரதான விடயம்
1. தலைநகர் வேதகிரிக்கு மாற்றப்பட்டமை
2. இந்துக்களின் எதிர்ப்பை ஆட்சியாளர்கள் பெற்றமை
3. பாபர்மன்னனின் படையெடுப்பு
4. பலவீனமான ஆட்சியாளர்கள் ஆட்சிப்பீடம் ஏறியமை

02. இலங்கையின் நீர்வளநாகரிகதொழினுட்பத்தில் நுண்ணளவுத் திட்டத்தில் கட்டப்பட்ட அதிசயக்கால்வாய் என கருதுவது
1. வசபனால் கட்டப்பட்டசுரங்கவழிநீர்ப்பாசனம்
2. தாதுசேனனின் ஜயகங்கைகால்வாய்
3. மகாசேனனின் பப்பதந்தகால்வாய்
4. 1ம் பராக்கிரமபாகுவின் அங்கமட்டில்லகால்வாய்

03. இலங்கையின் முதலாவது அரசியல் கட்சியும், அதனை ஆரம்பித்தவரையும் காட்டும் சரியான ஒழுங்கு
1. இலங்கைகொமியூனிஸ கட்சி - S.A.விக்கிரமசிங்க
2. லங்காசமசமாஜக் கட்சி - M.N.பெரேரா
3. ஐக்கியதேசியக்கட்சி - D.S.சேனநாயக்கா
4. தமிழரசுக்கட்சி - S.J.V.செல்வநாயகம்

04. பிரித்தானியர் ஆட்சியினால் ஏற்பட்ட பொருளாதார விளைவு அல்லாதது
1. பெருந்தெருக்கள்,புகையிரதப்பாதை அமைப்பு
2. தேயிலை,போல்பிக், இறப்பர்தோட்டம் ஆரம்பிப்பு
3. தோட்டதொழிலாளர், நகர்ப்புறத் தொழிலாளர்,வர்த்தகம் உருவானமை
4. கொழும்புத்துறைமுகம் சர்வதேசதுறைமுகமாக விரிவடைந்தமை

05. பின்வருவனவற்றுள் இரண்டாம் உலகமகாயுத்தத்தின் ஒருவிளைவு எனக் கருதப்படுவதுளது?
1. சர்வதேசசங்கத்தின் தோற்றம்
2. ஐக்கியநாடுகள் சபை தோற்றம்
3. வேர்செயில்ஸ் உடன்படிக்கை
4. ஐரோப்பாவின் பேரரசுகள் பல அழிந்தமை

06. உலகமகாயுத்தங்களின் போது ஐரோப்பிய நாடுகளுக்கு வெற்றியை பெற்றுக் கொடுத்த ஐரோப்பிய நாடுகளுள் அடங்காத நாடு எது?
1. பெரியபிரித்தானியா
2. ஐக்கியஅமெரிக்கா
3. பிரான்சு
4. ஜேர்மனி

07. முதலாம் உலக மகா யுத்தத்தில் ஐக்கிய அமெரிக்க பங்கு பெறுவதற்கான உடனடிக் காரணம்
1. பாசிசவாதமும் நாசிசவாதமும் எழுச்சியடைந்தமை
2. ஹிட்லர் போலந்தை ஆக்கிரமித்தமை
3. நீர்மூழ்கிக்கப்பலின்மூலமாக லுசிதானியா கப்பல் தாக்குதலுக்கு உள்ளானமை
4. யப்பான், பேர்ள் துறைமுகத்தை தாக்கியமை

ஆசிரியர் :
**த. அகிலன்,** Dip. in Tech. (Merit)
புனித மரியாள் கல்லூரி, திருகோணமலை
வெற்றிப்படி ஆசிரியர், ஆறுதல் நிறுவன வரலாற்றுப் பாட ஆசிரியர்

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் - 05

பிரதீபா

1. பின்வரும் பூக்களிடையே வேறுபட்ட பூ எது?
1. தாமரை 2. ரோசா 3. எக்சோரா

2. ஒருவருக்கு ஒரு குளவி கொட்டினால் செய்யக் கூடிய முதலுதவி எது?
1. கொடுக்கை அகற்றிய பின் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லல்
2. கைமருந்தை காயத்தின் மீது பூசுதல்
3. கொடுக்கை அகற்றிய பின் கைமருந்தை பூசுதல்

3. சுதன் தனது வீட்டிலிருந்து மேற்குத் திசை நோக்கி 200மீ தூரம் சென்ற பின், வடக்கு நோக்கி திரும்பி 100மீ சென்றான் இதன் பின் கிழக்குத் திசை நோக்கித் திரும்பி 500மீ தூரம் சென்று பாடசாலையை வந்தடைந்தான் எனில், சுதனின் வீடு பாடசாலைக்கு எத்திசையில் உள்ளது?
1. மேற்கு 2. வடகிழக்கு 3. தென்மேற்கு

4. மிண்டி வேர் எனும் விஷேட வேரைக் கொண்ட தாவரம் எது?
1. குருவிச்சை 2. இறுங்கு 3. அரசு

5. மாடுகளின் வால், முதுகுகளில் ஒட்டியபடி பரம்பலடையும் தாவரவித்து எது?
1. குண்டுமணி 2. நாயுண்ணி 3. நாயுருவி

6. நிமலனின் வீட்டிற்கும் மக்கள் வங்கிக்கும் இடையிலான தூரம் 1500மீ ஆகும். இத்தூரத்தில் 2/5 பகுதியை நடந்தும், மீதித் தூரத்தை சைக்கிளிலும் சென்றான். எனில் அவன் நடந்து, சைக்கிளில் சென்ற தூரங்கள் முறையே?
1. 300மீ, 900மீ 2. 600மீ, 900மீ 3. 900மீ, 600மீ

7. ஒரு நீளமான வாங்கில் சில மாணவர்கள் அமர்ந்துள்ளனர். இதில் குமார் முன்னாலிருந்து ஐந்தாவதாக அமர்ந்துள்ளான். பின்னாலிருந்து கணக்கிடும் போது மூன்றாவதாக அமர்ந்துள்ளான் எனில், வாங்கில் அமர்ந்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?
1. 7 2. 8 3. 6

8. பின்வரும் வாக்கியங்களை கருத்துமிக்கதாக ஒழுங்குபடுத்திக் கூறுவது?
அ. அப்பா பரிசு வாங்கித் தந்தார்.
ஆ. பரீட்சைக்குத் தோற்றினேன்.
இ. விடாமுயற்சி வெற்றி தரும் என ஆசிரியர்கள் பாராட்டினர்.
ஈ. மிகவும் கடினமாகப் படித்தேன்.
உ. பரீட்சையில் அதியுயர் சித்தியெய்தினேன்.
1. அஇஉஈஆ 2. ஈஆஉஅஇ 3. ஈஆஉஇஅ

9. கூடைப்பந்தாட்டப் போட்டியில் ஒரு அணியில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1. 5 பேர் 2. 6 பேர் 3. 7 பேர்

10. இரவில் மலரும் பூக்களினது நறுமணம் அதிகமாக இருப்பதற்கான காரணம் யாது?
1. நிலவொளி அதிகமாக இருப்பதால் 2. வண்டுகளைக் கவர்வதற்கு 3. தாம் மலருவதைத் தெரிவிப்பதற்கு

11. பப்பாசி இலையின் வடிவத்தை ஒத்த இலை அல்லாதது எது?
1. ஈரப்பலா 2. மரவள்ளி 3. அகத்தி

12. சிறிய தாவரமொன்றை சிரட்டையினால் மூடி சில நாட்களின் பின் திறந்து பார்த்தால் தாவரத்தின் இலை வெளிறி மஞ்சள் நிறமடையும். இதற்கு காரணமாக அமையாதது பின்வருவனவற்றுள் எது?
1. பச்சையம் உற்பத்தி செய்யப்படாமை 2. மஞ்சயம் உற்பத்தி செய்யப்படுதல் 3. சூரிய ஒளி கிடைக்காமை

13. மின்சாரத்தைச் சிக்கனமாகப்பாவிக்க பயன்படுத்தக்கூடிய மின்குமிழ்
1. மெக்குரி மின்குமிழ் 2. புளோர் ஒளிர் மின்குமிழ்
3. நிப்போன் மின்குமிழ்

14. பொதி செய்யப்பட்டுள்ள உணவுப் பொதியினுள் சிலிக்கா ஜெல் வைப்பதன் நோக்கம்
1. நிறம் மாறாது 2. சுவைக்கு 3. பொதியிலுள்ள வளியை உறிஞ்சியெடுக்க

15. மதனின் வயது 11 வருடங்கள். அவனுடைய தாயின் வயது 38 வருடங்கள் ஆகும். மதன் பிறப்பதற்கு முன் அவனின் தாயின் வயது யாது?

பெயர்: ..................................................
..................................................
முகவரி: ..................................................
..................................................
..................................................
பாடசாலை: ..................................................

தரம் ஐந்து புலமைப் பரிசிற் போட்டியின் வெற்றியாளர்
*அ.லக்ஷன்*
*133/29, தில்லைநகர் திருகோணமலை*
*தி/புனித சூசையப்பர் கல்லூரி*
பரிசு விரைவில்

## தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, கடல் முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புறம் ஒரு விஷம் (தொடர்ச்சி)

இந்த நான்கு கட்டளைகளில் மூன்றாவது கட்டளையை இறைவன் குறுப்பிடும்போது (அதாவது நீங்கள்) ஒருவருக்கொருவர் புறம் பேசாதீர்கள். இறந்து விட்ட தனது சகோதரனின் மாமிசத்தை உங்களில் எவரேனும் சாப்பிட விரும்புவாரா? என வெறுப்புக் கலந்த பாணியில் கேட்கிறான் புறம் எனும் கெட்ட குணம் செத்த பிணத்தை புசிப்பதற்கு இணையானது என்பது இவ்வனத்தில் சாரமாகும்.

யார் தனதுசகோதர முஸ்லிமின் குறைகளை மறைக்காமல் பகிரங்கப் படுத்துகிறார்களோ அவர்களின் குறைகளை அல்லாஹ் இம்மையிலும், மறுமையிலும் அம்பலப்படுத்தி கேவலப்படுத்துவான். ஈமான் கொண்டோர்களே முஸ்லிம்களைப் பற்றிப் புறம் பேசாதீர்கள். அவர்களது குறைகளை ஆராயாதீர்கள். யார் மற்றவர்களின் குறைகளை தேடித் திரிகின்றாரோ அவர்களது குறைகளை அல்லாஹ் தொடர ஆரம்பிப்பான் யாருடைய குறைகளை அல்லாஹ் தொடர ஆரம்பிக்கின்றானோ. அவர்கள் தமது வீட்டுக்குள் செய்யும் குறைகளையும் பகிரங்கமாக்கி இழிவு படுத்தி விடுவான்.

நான் மிஃராஜ் எனும் விண்ணுலகப் பயணத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட வேளையில் ஒரு கூட்டத்தைக் கடந்துச் சென்றேன். அவர்களுக்கு செம்பினாலான கூரிய நகங்கள் இருந்தன. அவற்றால் தமது முகங்களையும், மார்புகளையும் தாமே கீறிக் கிழித்துக் கொண்டிருந்தனர். இவர்கள் யார்? ஏன் இவ்விதம் நடந்து கொள்கின்றனர்? என ஜிப்ரீல் அவர்களிடம் வினவினேன் இவர்கள் தான் மக்களது மானங்களை இழக்கச் செய்து மனித மாமிசம் சாப்பிட்டவர்கள் என விளக்கம் கூறினார்கள்.

மறுமையில் நடக்கவிருக்கும் இந்தப் பயங்கர தண்டனைக்கு அஞ்சி புறம் எனும் கொடிய குற்றத்திலிருந்து நாம் முற்றாக் விலகிக் கொள்ள வேண்டும்.அடுத்து யாராவது நம்மிடம் புறம் பேசினால் பேசுபவருடன் சேர்ந்து நாமும் பேசுபவருக்கு புறத்தின் விபரீதங்களையும் உணர்த்தி அவரைத் திருத்த வேண்டும். நமக்குத் தெரிந்த எவரைப் பற்றியாவது புறம்பேசப் பட்டால் அவரது நல்ல நடத்தைகளையும் பண்புகளையும் உதவி செய்வதையும் எடுத்துக்கூறி அவருக்கு சார்பாகவாதாட வேண்டும். யார் தன்னுடைய சகோதரனின் கண்ணியம் மற்றும் மானமரியாதைக்கும் களங்கம் ஏற்படுவதை விட்டும் தடுக்கின்றாரோ அவருடைய முகத்தை அல்லாஹ் குறிப்பிட்டார்கள்.

**திருமதி சப்றா ஆசிரியர்**
**நெய்தல் நகர்,மூதூர்**

**முற்றும்.**

# வெளிநாட்டு மோகம் (தொடர்ச்சி)

இப்படியான தவறுக்களுக்கு முழுப் பொறுப்பையும் கணவன் மார்களே ஏற்றுக் கொள்ள வேண்டும். வீடு கட்ட வேண்டும் என்று சிந்தித்தீர்கள். வாகனம் வாங்க வேண்டுமென்று சிந்தித்தீர்கள். நான்கு பேருக்கு முன்னால் நல்லா வாழ வேண்டும் என்று யோசித்தீர்கள் ஆனால் உங்கள் மனைவிக்கும். ஆசைகளும் தேவைகளும் இருக்கின்றது. என்பதை அடியோடு மறந்து விட்டீர்கள்.

எனவே நீண்டகாலத்திற்கு மனைவியை விட்டு கணவன் பிரிந்திருப்பதை இஸ்லாம் விரும்பவில்லை அதே நேரம் கணவன் வெளிநாட்டில் இருக்கும் போது வங்கிகளுக்கோ ஆஸ்பத்திரிகளுக்கோ வேறுதனி இடங்களுக்குச் செல்லும் போது என் கணவர் வெளிநாட்டில் என்று கூறாதீர்கள். ஏனென்றால் இதை சில ஆண்கள் தனக்கு சாதகமாகப் பயன் படுத்திக்கொண்டு உதவி என்ற பெயரில் மோசமாக நடந்து கொள்ள முயற்சி செய்வார்கள். எனவே திருமணம் முடித்தபின் ஆண்கள் தொழிலுக்காக வெளிநாட்டிற்கு செல்வதைப் பற்றி சிந்தித்துச் செயற்படுங்கள்.எனவே ஆண்கள்,பெண்களாகிய நீங்கள் எடுக்கும் முடிவை சிந்தித்து எடுங்கள் ஏனெனில் அது இம்மைக்கும் மறுமைக்கும் பயனுள்ளதாக அமையும்.

**முற்றும்.**

# சுவர்க்கவாசிகளுக்குஇறைவன் கூறும் நற்செய்தி

நபி அவர்கள் கூறினார்கள் அல்லாஹ் (மறுமையில்) சுவர்க்க வாசிகளை நோக்கி சுவாக்கவாசிகளே என்று அழைப்பான் அவர்கள் எங்கள் அதிபதியே இதோ கீழ்ப்படியக் காத்திருக்கிறோம். நன்மை அனைத்தும் உன் கரங்களிலிலேயே உள்ளது என்று பதிலளிப்பார்கள்.

அப்போது அல்லாஹ் நீங்கள் திருப்தியஅடைந்தீர்களா என்று கேட்பான் மக்கள் எங்கள் அதிபதியே! நாங்கள் திருப்தியடையாமலிருக்க எங்களுக்கு என்ன? நீ உன் படைப்புகளில் எவருக்கும் வழங்கிராத வற்றை எங்களுக்கு வழங்கியிருக்கிறாயே என்று பதிலளிப்பார்கள் அதற்கு அல்லாஹ் இதை விடவும் சிறந்ததை நான் உங்களுக்கு வழங்கட்டுமா என்று கேட்டான். சுவர்க்க வாசிகள் எங்கள் அதிபதியே இதை விடச்சிறந்தது எது என்று கேட்பார்கள். அதற்கு அல்லாஹ் உங்கள் மீது என் திறப்தியைப் பொழிகின்றேன். இனி என்றுமே உங்கள் மீது நான் கோபப்பட மாட்டேன் என்று சொல்வான்.

**நஜாத் இல்காம்**
ஆனைச் சேனை,மூதூர்- 02

# பொறுமை

பொறுமை என்ற உயர்பண்பு மனிதனுக்கு அவசியமாகும் கஸ்டத்தையும், துன்பத்தையும் சகித்துக் கொள்வதும் நற்கருமம் செய்யும் போது சிரமத்தை பாராமல் இருப்பதுவுமே பொருமையாகும். அல்லாஹ் மனித வாழ்க்கையும், மரணத்தையும், மனிதனை சோதித்துப் பார்ப்பதற்காகவே அடைத்தான். அல்லாஹ் தன்னடியார்களைப் பயத்தாலும், பசியாலும், பொருற்கள், உயிரினங்கள், விளைச்சள்கள் ஆகியவற்றின் இயல்புகளாகும் சோதிப்பான் என்று இச்சோதனைகளைசகித்துக் கொள்ளும் முஃமீன்களுக்கு நன்மாராயனம் கூறும் படியும் அல்லாஹ் தனது நபிகளுக்கு கட்டளையிடுகிறான். எனவே ஈமான் உள்ளவன் சோதனையின் போது தனது ஈமானை பாதுகாத்துக் கொள்வதற்குப் பொறுமையைக் கடைப்பிடிக்கக் கூடியவனாக இருக்க வேண்டும்.

வாழ்க்கையில் வசதியுள்ள சந்தர்பங்களில் கூட மனக்கட்டுப் பாட்டை வளர்ப்பதற்கு ஒரு விசுவாசிக்கும் பொறுமை தேவைப்படுகிறது. இதன் காரணமாகத்தான் அல்லாஹ் முஃமீன்கள் மீது நோன்பை விதியாக்குள்ளான்.

“நோன்பு பொறுமையின் அறைப்பாகம்” என்ற நபி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள் மனிதர்களுக்கு வசதியோடுகூடியவாழ்கை அமைவதும் அல்லாஹ்வின் ஒரு சோதனையாகும். அப்போது அவன் தனது மனோ இச்சைப்பிரகாரம் உலக வஸ்துக்களை அனுபவித்தல் அளவு கடந்து சென்று விடாமல்இருக்க பொறுமையைக் கையாளவேண்டியவனாக இருக்கிறான் மேலும் அல்லாஹ்வுக்கு வளிபடும் விடயத்திலும் ஒரு முஃமீனிடம் பொறுமை தேவைப்படுகிறது.

**பரீத் பாத்திமா றிஸ்னா**
ஆனைச் சேனை,மூதூர்- 02




# சமையல் குறிப்பு

## ஜெல் புடிங்



**தேவையான பொருட்கள்:**தேங்காய் -8தம்ளர் (2 தேங்காய்), கித்துள்/சர்க்கரை- 100g, சீனி-250g, ஜெலற்றின்-50g, சிறிதாக வெட்டியகஜீ-25g, பிளம்ஸ்-25g வனிலா-2மே.கரண்டி, தண்ணீர்-2தம்ளர், பைனப்பிள் ஏசன்ஸ்-2 துளிகள்.

**செய்முறை:-** பாத்திரத்தில் தேங்காய்ப்பாலை விட்டு கித்துள், சீனி என்பவற்றைச் சேர்த்து அடுப்பில்வைத்துக் காய்ச்சவும் கித்துள் சீனி என்பன கரைந்து பால் பொங்கிக் கொதிக்கத் தொடங்கியதும் பாத்திரத்தை அடுப்பிலிருந்து இறக்கிவைத்துக் கொள்க.

பின்பு பிறிதொரு பாத்திரத்தில் ஜெலற்றீனையிட்டு இரண்டு தம்ளர் தண்ணீர் விட்டுக்கலக்கி கொண்டபின்புபாத்திரத்தைஅடுப்பில்வைத்துக்காய்ச்சவும், ஜெலற்றீன் முழுவதும் கரைந்து ஓரளவு தடிக்கத் தொடங்கியதும் இறக்கிக் காய்ச்சிவைத்துள்ள தேங்காய்ப்பால் கரைசலில் ஊற்றிக் கலக்கிக் கொள்க.

இக்கலவை நன்றா ஆறியபின்பு வனிலா, பைனப்பிள் ஏசன்ஸ் என்பன கலந்து பீற்ரறால் நுரைபொங்கும் வண்ணம் அடித்துக்கொண்ட பின்பு குளிரூட்டியில் வைத்து கலவை இறுகியதும் எடுத்து ஐஸ்கீறீம் பரிமாறும் கிண்ணங்களில் நிரப்பி கஜீ, பிளம்ஸ் என்பவற்றை மேற்பரப்பில் தூவிக்கொணடு பின்பு பரிமாறலாம்.

## எல்லோருக்கும்பொதுவானது



விரியாத மல்லிகை மொட்டு 20 பன்னீர் ரோசா -03, ரோஸ்வோட்டர்-1மே.கரண்டி,பால்-3மே.கரண்டி **செய்முறை:** ஓர் பாத்திரத்தில் மல்லிகை மொட்டு, ரோசா இதழ் என்பவற்றையிட்டு பால்,ரோஸ் வோட்டர்விட்டு நன்கு கைகளால்பிசைந்து அத்தண்ணீரில் தொட்டு மசாஜ்செய்க பின்பு கோஸ் பீசை முகத்தில் விரித்து அதன் மேல் மசித்த கலவையை பரவலாக வைத்து 20 நிமிடத்தின் பின் கோஸ்பீசை அகற்றி குளிர் நீரால் கழுவுக. கிழமைக்கு ஒரு தடவை செய்க முகத்திற்கு மெல்லிய துணியை விரிக்கலாம்

## முகத்தில் பரு,கரும்புள்ளி குறைய மற்றும் வெயில் சுட்ட கருமை குறைய



பயிற்றம்மா-1கரண்டி, கடலைமா-1கரண்டி, செஞ்சந்தனம்-1/2, வெண்சந்தனம்- 1/2கரண்டி, மஞ்சள்தூள்-1/4கரண்டி, தயிர்-1கரண்டி, முல்தானிமட்டி-1கரண்டி, தண்ணீர் தேவையான அளவு.

எல்லாத்தையும் ஒன்றாக ஒரு பாத்திரத்தில் குழைத்து முகம், கழுத்து போன்றவைக்கு பூசி 20 நிமிடம் விட்டு குளிர் தண்ணீனால் கழுவுக. கிழமையில் 3நாள் செய்து வர கரும்புள்ளி பரு,வெயில் கருமை எல்லாம் போய்விடும்.

## உதட்டு கருமை போக



தேன்-1கரண்டி, ஓரேஞ்யூஸ்-1கரண்டி, பீற்றுட்யூஸ்-1கரண்டி

மூன்றையும் ஒன்றாக கலந்து ஒவ்வொரு நாளும் பூசிவர கருமை குறைந்து போய் விடும்.

## முகத்தில் கருமை போக



வெண்கரு-1, சோற்றுக்கற்றாலை-2கரண்டி உள்ளுக்குள் இருக்கு ஜெல், பச்சை உருளைக்கிழங்கு-2கரண்டி அரைத்து. மூன்றையும் ஒன்றாக கலந்து முகத்தில் பூசி வைத்து1/2 மணித்தியாலத்திற்கு பிறகு கழுவுங்கள். கிழமைக்கு 1தடவை

## அரும்பு மீசை போக

குப்பைமேனி-காயவைத்த 1கரண்டி,வேப்பம்இலை-காயவைத்த 1கரண்டி மஞ்சள்தூள்-1/2கரண்டி,தண்ணீர் தேவையான அளவு.

மூன்றையும் ஒன்றாக கலந்து குழைத்து இரவில் பூசி படுக்கவும். ஒவ்வருநாளும் செய்து வர 21/2 மாதங்களில் அரும்பு மீசை இல்லாமல் போய்விடும்

**அதிஷா அழகுநிலையம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திரக் கட்சி ஓர் இனவாதக் கட்சியல்ல



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு கல்குடாத் தொகுதி மத்திய செயற்குழுவின் பிரதான காரியாலயம் வந்தாறுமூலையில் திறந்து வைக்கப்பட்டது.

அந்நிகழ்விற்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மீள்குடியேற்றப் பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேசிய கட்சிகள் தனியொரு இனத்திற்கானவை அல்ல என அவர் தெரிவித்தார்.

## காவல்துறையினரைத் தாக்கியது யானை



குமரக்கடவை (கோமரங் கடவல) பிரதேசத்தில் மீண்டும் யானைகள் மனிதர்கள் மீது தாக்குதலை நிகழ்த்தியுள்ளது.

குமரக்கடவை கெமுனுபுர பகுதியில் காவல் கடமைக்காகச் சென்று கொண்டிருந்த காவல்துறை அலுவலர்கள் இருவரை தனியன் யானை தாக்கியுள்ளது.

14ம் திகதி மாலை 5.30 மணியளவில் இரவுக் காவல் கடமைக்காகச் சென்று கொண்டிருந்தவர்களே காயமடைந்துள்ளனர்.

உந்துருளியில் பயணித்த இரண்டு காவலர்களையும் யானை தாக்கியதால் ஒருவர் சிறுகாயங்களுடன் தப்பி விட மற்றையவர் கடுங் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

கடுமையாகக் காயமடைந்த எம்.முதியான்சே என்ற 57 வயதுடைய காவலர் திருமலைப் பொதுவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(கீத்)

## சுற்றாடலைப் பாதுகாக்க மரநடுகை



தேசத்திற்கு நிழல் தரும் மரநடுகைத் திட்டத்திற்கு அமைவாக சுற்றாடலைப் பாதுகாக்க தெருமருங்கில் நிழல் விருட்சம் என்ற தொனிப் பொருளில் நாடெங்கிலும் உள்ள வீதிகளின் மருங்குகளில் மரங்களை நடும் திட்டம் 15ம் திகதி காலை திருகோண மலையில் நகரசபைக்கு முன்பாக ஆரம்பிக்கப் பட்டுள்ளது.



இந் நிகழ்ச்சிக்கு வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் நிறைவேற்றுப் பொறியியலாளர் பி.கே. ஜேசுதாசன், துறைமுகக் காவல்துறை அதிகாரி உபாலி டி நாரம்பனாவ மற்றும் புனித மரியாள் கல்லூரி அதிபர் அருட்சகோதரி நிரோசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

(கீத்)

## - குப்பையகற்ற மறந்த நகரசபை -



திருகோணமலை நகரசபையானது நீதிமன்ற வீதியில் இரண்டு வாரங்களாக குப்பையகற்றலைச் செய்யாதிருந்ததாக மலைமுரசின் வாசகர் ஒருவர் அறிவித்துள்ளார்.

கடந்த 29.10.2013ல் குப்பையை அகற்றிய வண்டி பின்னர் 13.11.2013லேயே குப்பையகற்ற வந்ததாகவும் அக்காலப்பகுதினில் குப்பைகள் தெருவில் கிடந்ததாகவும் அவ்வாசகர் தெரிவித்துள்ளார். குப்பையகற்றப்படும் குறித்த தினத்தில் பொது மக்கள் பைகளில் தமது வீட்டுக் கழிவுகளை போட்டு கட்டி தெருவில் வைப்பது வழமையானது என்றும் குறித்த தினத்தில் குப்பையகற்ற நடவடிக்கை எடுக்கப்படாததாலேயே குப்பைகள் தெருவெங்கும் சிதறிக் கிடந்ததாக அவர் முறைப்பாடு செய்துள்ளார்.



நீதிமன்ற வீதியென்பது திருகோணமலையின் முக்கிய பெருந் தெருக்களில் ஒன்று என்பதுடன் கால் நடைகளும், நாய்களும் குப்பைகளை துவம்சம் செய்து தெருவெங்கும் சிதற விட்டதையும் காண முடிந்ததாக அவர் தெரிவித்துள்ளார். நகரசபைத் தலைவரே! உங்களது கவனத்திற்கு.....!!!



## "அப்துல் கலாம் என்ன சொன்னாரு"




மட்டக்களப்பு புனித மிக்கேல் தேசிய பாடசாலை மாணவன் கதை திரைக்கதை, வசனம், எழுதி இயக்கிய "அப்துல் கலாம் என்ன சொன்னாரு" எனனும் குறும் திரைப் படத்தின் வெளியீட்டு விழா நவம்பர் 17ம் திகதி ஞாயிறு பி.ப 4.30 மணிக்கு மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. இவர் ஏற்கனவே சல்லி, வண்ண ஓவியம் என அதிகம் பேசப்பட்ட குறும்திரைப்படங்களை எழுதி இயக்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்படத்திற்கான ஒளிப்பதிவை விபு அவர்களும் படத்திற்கான இசையை ஜனனி அவர்களும் படத்தொகுப்பை நிரோசன் அவர்களும் வழங்கியுள்ளனர்.

(ஜோ..அ.ச.கோ )

## டெங்கு எச்சரிக்கையும் விழிப்புணர்வும்

(எம்.ரீ.எம்.பர்ஹான்)

கிழக்கெங்கும் மழை பெய்து வருவதால் வெள்ள நீர் தேங்கி நிற்பதுடன் கழிவுநீர் கலந்து நீர் அசுத்தமடைந்துள்ளதால் நுளம்புகள் அதிகம் பெருகும் அபாயமும் காணப்படுகின்றது.

இதனால் ஆட்கொல்லி டெங்கு நோய் போன்ற நோய்கள் பரவக்கூடிய நிலை தோன்றியுள்ளதால் மக்கள் பெரிதும் அவதானமாக இருக்குமாறும் தமது சுற்றுப்புற சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறும் கிழக்கெங்கிலும் சுகாதார அதிகாரிகள் மக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

மேலும் எதிர்வரும் நாட்களில் சுகாதார பரிசோதகர்களால் டெங்கு நுளம்பு பரவுவதற்கு எதுவாக தமது சூழலை வைத்திருப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வுள்ளதாகவும் சுகாதாரத் துறையினர் அறிக்கையிட்டுள்ளனர். இதனைக் கவனத்தில் கொண்டு சம்மாந்துறை முஸ்லிம் மகளிர் வித்தியாலயத்தினால் விழிப்புணர்வு ஊர்வலம் அதிபர் ரீ.எம். தௌபீக் மற்றும் பிரதி அதிபர் ஏ.எம்.தாஹாநழீம் தலைமையில் நிகழ்த்தப்பட்டுள்ளது.



## பாடத்துறை சார் திறன்கள் - செயலமர்வு



சம்மாந்துறை வலயக் கல்வி பணிமனை ஏற்பாடு செய்த பாடத்துறை சார்ந்த திறன்கள் என்னும் தொனிப் பொருளிலான செயலமர்வு சம்மாந்துறை வலயக்கல்வி பணிப்பாளர் எம்.கே.எம்.மன்சூர் தலைமையில் 2013-11-13,14 தினங்களில் வலயக்கல்வி அலுவலகத்தில் இடம் பெற்றது.



இந் நிகழ்விற்கு வளவாளராக அட்டாளைச்சேனை கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் ஜனாப் அசீஸ் அவர்கள் கலந்து கொண்டார்கள்.

(எம்.ரீ.எம்.பர்ஹான்)

## குணா கல்வி நிலையத்தின் வருடாந்த மாணவர் கௌரவிப்பு

2013ன் தரம் ஐந்து புலமைப் பரிசில் வெற்றியாளர்களையும் தரம் 11ல் சிறந்த பெறு பேறுகளைப் பெற்ற மாணவர்களையும் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 17.11.2013 அன்று திருமலை நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்குப் பிரதம அதிதியாக மனித உரிமைகள் மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்குமான மையத்தின் பணிப்பாளர் அருட் தந்தை வி.யோகேஸ்வரன் அவர்களும் சிறப்பு விருந்தினராக நகரபிதா திரு.க. செல்வராசாவும் கலந்து சிறப்பிக்க வுள்ளனர்.

(ஜெனி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் நடமாடும் சேவை



மட்டக்களப்பு மாவட்டத்தில் வதியும் சுமார் 45,000 மக்களிற்கு அடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொடுக்கும் நடமாடும் சேவையொன்று ஆரம்பமாகியுள்ளது.

ஆட்பதிவுத் திணைக்களம், இலங்கை மனித உரிமைகள் கேந்திரம் என்பன இணைந்து நடத்தும் இந் நடமாடும் சேவைக்கு கபே அமைப்பு தனது ஆதரவை நல்கியுள்ளது.

03

## எஸ். எல். ஆர் உடன் கல்முனைவாசி கைது



கல்முனை காவல்துறை பிரிவுக்குட்பட்ட மருதமுனை பிரதேசத்தில் வைத்து 32 வயதுடைய சம்மாந்துறை விளினயடியை சேர்ந்த ஒருவர் எஸ்.எல்.ஆர் துப்பாக்கி ஒன்றுடன் மருதமுனை விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப் பட்டுள்ளார். இந்த சம்பவம் 13.11.2013 மாலை 5.00 மணிக்கு

03

## இலட்ச ரூபாய்க் களவாணி கைது

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாரஊர்தியில் இருந்த ஒரு லட்சம் ரூபாய்ப் பணத்துடன் தலைமறைவான களவாணிச் சந்தேக நபரை காவல்துறை கைது செய்துள்ளது.

திருகோணமலை குச்சவெளிப் பிரதேசத்தில் நடந்த இக் களவில் பாரஊர்தியில் இருந்த பயணப்பையில் இருந்த பணமே களவாடப்பட்டிருந்தது.

களவாடிய சந்தேக நபர் அப்பணத்தில் 22,000 ரூபாய்களை களவாடிய இரு நாட்களுக்குள் செலவழித்து விட்டதாகவும் எஞ்சிய 78,000 ரூபாய்களை காவல்துறை மீட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. விசாரணைகள் தொடர்கின்றன.

திருகோணமலை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசிற் பரீட்சை வெற்றியாளர்களின் கௌரவ நிகழ்வில்



பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மக்கள் வங்கி முகாமையாளர் திரு. செல்வராஜா அவர்கள் மாணவனுக்குப் பரிசொன்றினை வழங்குவதையும் அருகில் பாடசாலை அதிபர் நிற்பதையும் காணலாம் (கென்யூட்)

## திருமலை நகரப் பகுதியில் டெங்கு !!!



திருகோணமலை நகரப் பகுதியில் டெங்கு நோய் பரவி வருவதாக திருகோணமலைப் பிரதேசச் சுகாதார வைத்திய அதிகாரி மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

அண்மையில் கிறீன் வீதிச் சந்தியில் வசிக்கும் மூதாட்டியொருவர் டெங்கு நோய்த் தாக்கத்தினால் மரணித்ததாக தெரிவித்த அவர் நகரப் புற மக்கள் இவ்விடயம் தொடர்பாகக் கடும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

03

## சேனையூர் மாணவனுக்கு மலைமுரசின் வாழ்த்து மடல்

ஈச்சிலம்பற்று கோட்டக்கல்வி வலயத்திற்குட்பட்ட தி/மூ.சேனையூர் வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவனைக் கௌரவிக்கும் நிகழ்வில் மலைமுரசு பத்திரிகையால் வழங்கப்பட்ட நினைவு மடலைக் கோட்டக் கல்வி அதிகாரி திரு.செ.லோகராஜா அவர்களும் வித்தியாலய அதிபர் திரு.ம.விஜயராசா அவர்களும் வழங்கி வைத்ததனையும் அருகில் பாடசாலை ஆசிரியர்களும் வலய அதிபர்களையும் படங்களில் காணலாம்.

இம்மடலை மலைமுரசின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகப் பத்திரிகையாளர் செல்லத்துரை சச்சிதானந்தகுமார் வடிவமைத்து வழங்கியது குறிப்பிடத்தக்கது.



## எதிர்பாராத நேரத்தில் சனாதிபதியை இடைமறித்தது எவ்வாறு?



கடந்த 12ம் திகதி கொழும்பு சினமென் கிராண்ட் உல்லாச விடுதியில் நடைபெற்ற பொதுநலவாய வர்த்தகக் கூட்டத் தொடரில் கலந்து விட்டுத் திரும்பிய சனாதிபதி மஹிந்த ராசபக்சவை எவ்வாறு சனல் 4 காணொளி அலைவரிசைப் பிரிவினர் இடைமறித்தனர் என்பது தொடர்பான விசாரணைகள் நடாத்தப்படவுள்ளன.

அன்றைய தினம் பொதுநலவாய வர்த்தகக் கூட்டத்தொடரில் கலந்துகொண்டு விட்டுத் திரும்பிய சனாதிபதியைச் சினமன்கிராண்ட் விடுதியின் வாசலில்

03



திருகோணமலை மாவட்ட சென் ஜோன்ஸ் முதலுதவிப் படைப்பிரிவின் ஆணையாளராகப் பலவருடங்கள் சிறப்பாகச் செயலாற்றிய திரு தேவசகாயம் - ஆசிரியர் வள நிலைய முகாமையாளருக்கான பிரியாவிடை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org